



அறைவு 02 இயம் 07 September 21 - 27, 2013

# மலைமுரசு
MALAIMURASU

வார இதழ்

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை : 25.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

### மனித உரிமைச் செயற்பாட்டாளர் அருட்தந்தை
# யோகேஸ்வரனுக்கு சுவரொட்டி மிரட்டல்

மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்துவரும் சட்டத்தரணியும், அருட்தந்தையுமான யோகேஸ்வரனுக்கு எதிரான சுவரொட்டிகள் பல இடங்களில் திருகோணமலையில் ஒட்டப்பட்டுள்ளன.

பல்வேறு குற்றச்சாட்டுகளையும், அவதூறுகளையும் அவர் மீது சுமத்தியுள்ள இச் சுவரொட்டிகளை "சத்தியப் பிரமாண அமைப்பு" என்ற அமைப்பே வெளியிட்டுள்ளது.

தமிழ் , சிங்கள மொழிகளில் தயாரிக்கப்பட்டிருந்த இச் சுவரொட்டிகள் பதிப்பிலும், கையெழுத்திலும் காணப்பட்டிருந்த இச் சுவரொட்டிகள் "இதோ உண்மை" என்ற தலைப்பிலும் "நிங்கள் தெரிதிருந்திர்கலா" என்ற தவறான தமிழ் எழுத்துப் பதிப்பிலும் காணப்பட்டுள்ளன.

15


வர்ணம் தீட்டப்பட்ட மதிற் சுவரொன்றில் ஒட்டப்பட்டு கிழிக்கப்பட்டுள்ள சுவரொட்டி

- ஐ.நாவின் மனித உரிமை ஆணையர் கிழக்கிற்குப் பயணித்த போது இவரைத் தனியே சந்தித்திருந்தார் -

## பதுமன் விடுதலை

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதியாகப் பணியாற்றிய "பதுமன்" என்றழைக்கப்படும் சிவசுப்ரமணியம் வரதநாதன் 18.9.2013 அன்று காலை 10.30 மணியளவில் விடுதலை செய்யப் பட்டுள்ளார். கடந்த புதன்கிழமை திருகோணமலை மேல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட இவர் மீது 2001ம் ஆண்டில் பாலம்போட்டாறு பிரதேசத் தளபதியாகச் செயற்பட்ட காலத்தில் படையினர் மீது தாக்குதல்களை நடத்தினார் எனவும் படையினரைக் கொலை செய்தார் எனவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டிருந்தன.



ஆனால் இக்குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரமாக மன்றில் பதுமனின் ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே சமர்ப்பிக்கப் பட்டிருந்தாகத் தெரிகின்றது. இவ்வொப்புதல் வாக்குமூலத்திலும்

15

## அபி'வி'ருத்தி' வேண்டுமா? அரசாங்கத்துடன் இணைந்தொழுகுங்கள்

கிழக்கிலுள்ள மக்கள் அனுபவித்துவரும் அரசியல் உரிமைகளை வடக்கிலுள்ள மக்களும் அனுபவிக்க வேண்டுமாயின் அரசுடன் இணைந்திருக்க வேண்டும் எனக் கூட்ட மொன்றில் கிழக்கின் முதலமைச்சர் மஜீத் தெரிவித்துள்ளார்.

மக்களின் தேர்வுகள் அரசை விட்டு வேறாக இருக்கும் பட்சத்தில் மீண்டும் இருண்ட யுகமொன்றில் அம்மக்கள் தள்ளப்பட்டு விடும் அபாயமொன்றிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## போயாவில் பேய்களுக்கு மது
### -விற்றவர் காவல்துறையால் கைது-



மட்டக்களப்பு கல்வியங்காடு மயானத்தில் மது விற்பனையில் ஈடுபட்டிருந்த இருவரை மதுப் போத்தல்களுடன் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

போயா தினமான கடந்த 19ம் திகதி மயானத்தில் மதுபான விற்பனையில் சிலர் ஈடுபடுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த காவல் துறையினரால் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து தலா 10 போத்தல்கள் சாராயமும், பியரும் கைப்பற்றப்பட்டுள்ளன.

(மட்டுநியூஸ்-கிருஸ்ணா)


## ஆசிரியர் தேவை....
### - பெரியகுளம் மக்கள் போர்-

தமது கிராமப் பாடசாலையில் நிலவும் ஆசிரியப் பற்றாக்குறையை நீக்க வேண்டும் என்ற கோசத்துடன் திருகோணமலை பெரியகுளம் கிராம மக்கள் பாடசாலையைப் பூட்டி எதிர்ப்பில் ஈடுபட்ட சம்பவமொன்று கடந்த திங்கட் கிழமை நடந்தேறியுள்ளது.

கடந்த பல மாதங்களாக ஆரம்பப் பாடசாலைக்கு ஆசிரியர் எவருமே நியமிக்கப்படவில்லை என்ற

15

- வயதான ஆசிரியர் ஒருவர் வகுப்பறையில் நித்திரை கொள்கின்றார். கேட்டால் நான் இங்கு வருவது அதற்காகவே...நீண்டகாலம் படிப்பித்த எனக்கு ஓய்வு தேவை என்கிறார்.



## நாட்டைவிட்டு மற்றொரு ஊடகவியலாளர் தப்பியோட்டம்



சண்டேலீடர் பத்திரிகையின் துணை ஆசிரியர்களில் ஒருவரான மந்தனா ஸ்மைல் உயிர் அச்சுறுத்தல் காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளை நாட்டை விட்டு தப்பியோடியுள்ளதாக அவரது சட்டவியலாளர் இணையத் தளமொன்றுக்குச் செவ்வியுள்ளார்.

அண்மையில் மந்தனாவின் வீட்டினுள் புகுந்த கொள்ளையர்கள் என தற்போதுவரை அடையாளம் காணப்பட்டவர்களால் மேற்கொள்ளப் பட்ட அச்சுறுத்தல்களை அடுத்தே அவர் நட்டை விட்டுத்தப்பியோடியுள்ளார்.

அவரது குடும்பத்தாருடன் நாட்டை விட்டு வெளியேறிய போது கடிதமொன்றை அவர் புதிதாக உருவாக்கப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கின் தரள அமைச்சின் செயலாளருக்கு

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்

### யாருக்கு வைத்திம் வேண்டும்

அண்மையில் அலுவலர் ஒருவர் எம்முடன் பேசிய பொழுது பைபிளின் அடிகள் சிலவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

"நோயுற்றவனுக்குத்தான் வைத்தியமேயொழிய திடகாத்திர மானவனுக்கு அல்ல" என்ற அந்த பைபிள் மொழிகளை அவர் கோடிட்டுக் காட்டியது எதற்காக என்றால் தற்போது பாடசாலைகளில் கற்பிக்கும் பெரும்பாலான ஆசிரியர்களின் மனநிலையை வெளிக்காட்டவே!

திறமையுள்ளவனுக்குக் கற்பித்து விடுவதும் திறமையற்ற வர்களைப் பற்றிக் கவலைப் படாதிருப்பது எமது ஆசிரிய சமுகத்தின் பண்பாக மாறிக் கொண்டிருக்கின்றது.

அண்மையில் பெரியகுளம் பாடசாலைக்கு நாம் சென்றிருந்த போது அவ்வகையான மன உணர்வையே நாமும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. மாணவர்களும் பெற்றோரும் பாடசாலையைப் பூட்டிவிட்டு பிரதான வாசலில் குந்தியிருக்க, அதிபர் தனியே நின்று கொண்டிருக்க, ஆசிரியர்கள் அனைவரும் மர நிழலில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க..... அற்புதமாக இருந்தது அந்தப் பாடசாலையின் சூழல். ஆசிரியர்கள், பாடசாலை, மாணவர்கள், அதிகாரிகள், பெற்றோர்கள் என்ற ஐங்கோண முனைகளில் எந்தவிதமான ஈர்ப்பையும் அங்கு காண முடியவில்லை.

மாணவர்களுக்கும், ஆசிரியர் களுக்கும் இடையலான உறவு வெறும் சம்பளப் பணத்திலா தங்கியிருக்கின்றது என்ற கேள்வி எம்முன் அன்று எழுந்தது. அதே நிலையில் நகரப் பாடசாலையொன்றில் இந் நிகழ்வு நடந்திருக்குமானால் அங்குள்ள ஆசிரியர்களின் ஊடாட்டம் அச்சந்தர்ப்பத்தில் எவ்வாறு இருந்திருக்கும் என்று எண்ணத் தோன்றுகின்றது.

"நான் பல ஆண்டுகள் ஆசிரிய சேவை செய்து விட்டேன். இங்கு ஓய்வாக இருக்கவே அனுப்பி வைக்கப்பட்டேன் என்றோர் வயதடைந்த ஆசிரியன் சொல்வானாகில் அவன் முன்னர் செய்த சேவை எவ்வாறிருக்கும் என்று எண்ண வல்லவா? தோன்றுகின்றது.

அண்மையில் நகர மகளிர் பாடசாலையொன்றில் உயர்தரப் பரீட்சைக் கண்காணிப்பாளராகச் சென்று மோசடிகள் செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தினை ஏற்படுத்திய மற்றொரு நகர மகளிர் பாடசாலையின் பிரதிப் பெண் அதிபர் எம்மிடம் கூறியது "என்னிடம் படித்தவர்கள் இச் சமூகத்தில் வைத்தியர்களாகவும், எந்திரிகளாகவும் பெரிய பதவிகளிலும் இருக்கின்றார்கள்" என்று.

திருவாளர்களே- திருவாட்டிகளே! எம் கேள்விகள் எல்லாம் உங்களின் படைப்பில் உருவான மனிதன் ஒருவனைக் காட்டுங்கள் என்பதே?

"அன்னயாவிலும் புண்ணியங் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே" என்ற குரல் உங்களுக்குக் கேட்கின்றதா?

## கொரியப் பெண்ணுடன் சேட்டை ... நடத்துனர் காவலில்



திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணமான பேருந்தில் பயணித்த கொரியப் பெண்ணொருவருக்கு இடைவிடாத பாலியல் தொந்தரவைக் கொடுத்த நடத்துனரைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாகத் தெரிய வருவது யாதெனில் கொரிய தூதுவராலயத்தில் வேலை செய்யும் மேற்படி பெண் ஊழியர் திருகோணமலையில் விடுமுறையைக் களித்த பின்னர் கொழும்பு நோக்கிப் பயணமாயுள்ளார். இரவு 10 மணிப் பேருந்தில் பயணித்த இப் பெண் தனியே பயணிப்பதைத் தெரிந்து கொண்ட நடத்துனர் இருவர் அமரும் இருக்கையில் அப்பெண்ணை மட்டும் தனியாக இருத்தி வசதிகளைச் செய்து கொடுத்துள்ளார்.

பின்னிரவில் அம் மற்றொரு இருக்கையில் அமர்ந்த நடத்துனர் தனது வேலையைக் காட்டத் தொடங்கியுள்ளார்.

பலதடவை மறுத்தும் இம்சைகள் தொடர்ந்ததைத் தொடர்ந்து நிட்டம்புவ பிரதேசத்தில் பேரந்தை விட்டிறங்கிய அப் பெண் நிட்டம்புவ காவல் நிலையத்தில் மேற்கொண்ட புகாரை அடுத்து பேருந்தை இடைநடுவில் நிறுத்திய காவல்துறையினர் நடத்துனரைக் கைது செய்துள்ளனர்.

## புதையல் தோண்டிகள் கைது

பொத்துவில், லாவுகலை மலைப் பகுதியில் புதையல் தோண்டுவதற்கு முற்பட்டதாகக் கூறப்படும் எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தங்களுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து லாவுகலை மலைப்பகுதியை நேற்று புதன்கிழமை மாலை 4.45 மணியளவில் சுற்றிவளைத்தபோது, புதையல் தோண்டுவதற்கு முற்பட்டதாகக் கூறப்படும் எட்டுப் பேரை கைதுசெய்துள்ளதாக பொத்துவில் காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதன்போது 3 அலவாங்குகள், 2 மண்வெட்டிகள், வெடிபொருள் உள்ளிட்ட பொருட்களை கைப்பற்றியுள ளதாகவும் அம்பாறை, கண்டி, பொத்துவில் ஆகிய பிரதேசங்களைச் சோர்ந்தவர்களே கைதுசெய்யப் பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

## "சிறுமி மீது பலாத்காரம்"

ஒன்பது வயதுச் சிறுமியைப் பலாத்காரம் செய்த 68 வயது முதியவன் காவல்துறைக் கண்காணிப்பிலுள்ளான்.

மட்டக்களப்பின் மகிழ்ஊர் முனைப் பகுதியில் கடந்த புதன்கிழமை மாலை இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அயல்வீட்டில் தனித்திருந்து விளையாடிக் கொண்டிருந்த சிறுமியினையே இக் கிழவன் பலாத்காரத்திற்குட்படுத்தியதாக தெரிகின்றது.

## "இடைவிலகிய மாணவர்களை மீண்டும் சேர்க்க நடவடிக்கை"

பாடசாலைக்குச் செல்லாது இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் மீள்சேர்க்கும் நடவடிக்கைக்கான நிகழ்வொன்று காரைதீவில் கடந்த 10ம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

காரைதீவு சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.யோகராசா தலைமையில் இந்நிகழ்வின்போது பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களுக்கான கற்றல் உபகரண்ங்கள் வழங்கி அம்மாணவர்களை மீளவும் பாடசாலைக்கு செல்லுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டன.

அத்துடன் அம்மாணவர்களை வைத்து சிறுவர் கழகம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. ,தன்போது சமுர்த்தி உத்தியோகத்தர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் சிறுவர் குழுவில் இணைப்பதற்காக நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஒலுவில் செய்தியாளர்: எம்.எல்.எம்.பாரீஸ்)

## அங்கீகாரம் பெற்ற தொழிற்பயிற்சி நிலையம் - அட்டாளைச் சேனையில்



மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் மக்களின் காலடியில் சேவை எனும் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அங்கீகாரம் பெற்ற தொழிற்பயிற்சி நிலையம் அண்மையில் அட்டாளைச்சேனையில் திறந்து வைக்கப்பட்டது.

இதனை திறந்து வைத்த பிரதி அதிதி அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லாவுக்கான ஞாபகச்சின்னத்தினை நிலையத்தின் பணிப்பாளர் ஏ.எல்.மக்கீனும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பொது முகாமையாளர் ஏ.கே.யு. றோஹணவுக்குரிய ஞாபகச் சின்னத்தினை அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபரும், அபிவிருத்திக் குழுத் தலைவருமான ஏ.சீ.சைபுதீன் ஆகியோரினால் வழங்கி வைக்கப்பட்டது.

(மீனோடைக்கட்டு: எம்.பைஷல் இஸ்மாயில்)

## திருகோணமலை மாவட்ட "இன்னர் வீல்" கழகத்தின் புதிய நிாவாக சபை பதவியேற்பு



புதிய தலைவி திருமதி ரேவதி வேங்கடேசன் அவர்களிடம் முன்னைய தலைவி திருமதி லதா திருக்குமரநாதன் பதவியைக் கையளிக்கும் போது



## தூக்கிட்டுத் தற்கொலை



மூன்று பிள்ளைகளின் தந்தையான ஹனிபா என்பவர் 18ம் திகதி மதியம் தனது வள்விள் உள்ள மாமரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்த சம்பவம் ஒன்று சம்மாந்துறையில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குடும்பப் பிரச்சினை காரணமாக இடம்பெற்றிருக்களாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளைக் காவல் துறையினர் மேற்கெண்டு வருகின்றனர்.


(முகமட் பர்ஹான் - சம்மாந்துறை நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசச் சட்டப்படி நிரூபிக்கப்படாத கொலைக்குற்றத்திற்காக மரண தண்டனைக்குள்ளான


# ரிசானாவின் குடும்பத்திற்கு வீடு

குழந்தையொன்றைக் கொலை செய்தார் என சர்வதேசச் சட்டப்படி நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டினால் சவூதியில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட ரிசானா நபீக்கின் குடும்பத்தினருக்குக் கட்டிக் கொடுக்கப்படும் வீட்டைப் பார்வையிட ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி ரி.என்.எல். கருணாரத்ன உட்பட்ட குழுவினர் 15ம் திகதி மூதூரிற்குப் பயணம் செய்துள்ளனர்.



ரிசானா சவூதியில் கொலை செய்யப்பட்ட பின்னர் அவரது குடும்பத்தினருக்கு வாக்குறுதிகள் பலவற்றை வாரியிறைத்த எவரும் அக்குடும்பத்திற்கு வீடொன்றைக் கட்டித்தர முன்வராத வேளையில் இராணுவத்துடன் இணைந்து ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகச் சமூகம் வீட்டைக் கட்டித்தரும் பணியில் ஈடுபடுவது தற்போதே தெரிய வந்துள்ளது. கட்டுமாணப் பணிகள் பெரும்பாலும் நிறைவுற்றுள்ள இத் தருணத்தில் அதனைக் கண்கொண்டு பார்வையிட பல்கலைக்கழகத்தினர் வருகை தந்திருந்தனர். இக்கட்டுமாணப் பணிகள் தொடர்பாக அவர்கள் இராணுவத்துடன் பேச்சுக்களிலும் ஈடுபட்டதாகத் தெரிகின்றது.

வாரம் ஒரு புகைப்படம்



படப்பிடிப்பு - அநுர-உதயா

விந்தியாசமான உங்களுடைய புகைப்படங்களும் இடம் பெற வேண்டுமாயின் எமது இலத்திரனியல் அஞ்சலுக்கு தபாலிடுங்கள்.

# டென்மார்க்கில் பிறண்டா அம்மனான ஈழ அகதிப் பெண்

டென்மார்க்கில் பிறண்டா அம்மனாகப் பிரபல்யம் பெற்றுள்ள பெண்ணொருவர் இலங்கையிலிருந்து அகதியாக இடம் பெயர்ந்தவர் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

ஒன்பது வயதில் அம்மனால் ஆட்கொள்ளப்பட்டவர் ஏன் அகதியாக நாட்டை விட்டுத் தப்பியோடியார் என்பதோ? எப்போது அவர் டென்மார்க்கைச் சென்றடைந்தார் என்பதோ இன்னும் வெளிவரா திருப்பதாகத் தெரிகின்றது. அவரது தனிப்பட்ட இணையத் தளத்தினுள் (http://www. abiramiamman.dk/) அவர் தற்போது வரை நிகழ்த்திய அற்புதங்கள் தொடர்பான செய்திகள் "விரைவில்" என்ற தலைப்பில் வெற்றாகக் கிடப்பதைக் காண முடிகின்றது.



"தொடர்புகளுக்கு" என்னும் தலைப்பில் வங்கிக் கணக்கின் இலக்கத்தையும் இணைத்துள்ளமையானது பிறண்டா அம்மனின் பக்த கோடிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாகத் தெரிகின்றது.

## புதிய பாடத்திட்டம் 2015ல் இருந்து...

இலங்கையின் பாடத்திட்டத்தில் 2015ம் ஆண்டில் மாற்றத்தைக் கொண்டு வர அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிகின்றது. அதன்படி தரம் 1, 6 மற்றும் 10 ம் தரங்களின் பாடத் திட்டத்தை 2015 ம் ஆண்டில் இருந்து மாற்ற உத்தேசித்திருப்பதாக தெரியவந்துள்ளது.



## இராசதந்திரிகளே வாருங்கள்.. வடக்கின் தேர்தல் நடைபெறும் விதத்தைப் பாருங்கள்... தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு!

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதராலயங்களின் பிரதிநிதிகளை வடக்கில் நடைபெறவுள்ள தேர்தலைக் கண்காணிக்க வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வழைப்பின் மூலம் வடமாகாண சபைத் தேர்தலில் நிகழவிருக்கின்ற அத்துமீறல்கள், அச்சுறுத்தல்கள், இறுதி நேரப் பிரசாரங்கள், இலவசச் சலுகைகள் போன்றவற்றை தடுத்து நிறுத்த அல்லது அவ்வாறு நிகழ்வதை உலக அரங்கிற்குத் தெரியப்படுத்தலாம் எனத் தாம் நினைப்பதாகத் த.தே.கூ தெரிவித்துள்ளது. எனினும் இவ்வழைப்பை இராச தந்திரிகள் ஏற்றுக் கொண்டுள்ளார்களா என்பது தெரியவில்லை.

## -வடக்கின் அபிவிருத்தி பன்மடங்காக வேண்டுமா? சனாதிபதிக்குச் சந்தர்ப்பம் தாருங்கள்-

வடக்கில் அபிவிருத்திகள் துரித கதியில் நிகழ்கின்றன. அரச படைப்பிரிவில் வடக்கின் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கியுள்ளோம். தடுப்புக்காவலில் இருப்பவர்களுக்கும் துரித கதியில் புனர்வாழ்வளித்து விடுதலை செய்யவுள்ளோம். வட பகுதி இப்பொழுதே சுதந்திரமாக இயங்கக் கூடியதாக உள்ளது. அபிவிருத்தி இன்னும் பன்மடங்காக வேண்டுமாயின் மக்கள் எமக்குச், சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என சனாதிபதி வடபகுதி வாழ் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கரையிலிருந்த படகு மாயம்

கடந்த 13.09.2013 வெள்ளிக்கிழமை அன்று அமிர்தலிங்கம் அசோகன் என்பவரது படகு மற்றும் இயந்திரம் காணாமல்போன சம்பவம் அலஸ்தோட்டம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.



சம்பவம் குறித்து அவர் மலைமுரசிற்கு தெரிவிக்கையில் 13ம் திகதியன்று நான் தனியாக தொழிலுக்குச் செல்லும் காரணத்தால் அன்று 9 மணியளவில் தொழிலுக்குச் செல்வதற்காக இயந்திரத்தை பொருத்தி எனது படகினை கடலை நோக்கி திருப்பி வைத்து விட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். 10 மணியளவில் செல்லலாம் என நினைத்து சற்று நேரம் உறங்கினேன். தொடர்ச்சியாக இரவு தொழில் செய்ததால் சற்று அசதியில் என்னை மறந்து உறங்கி விட்டேன். உறக்கம் கலைந்து எழுந்து பார்க்கையில் மணி 3ஆக இருந்தது. ஆகவே பகல் தொழிலுக்குச் செல்வோம் என நினைத்து கடற்கரைக்குச் சென்று பார்க்கையில் கரையில் இருந்த எனது படகினை காணவில்லை.

அருகில் இருந்த எனது அண்டை வீட்டாரிடம் இது பற்றி கூறினேன். அவர்கள் யாவரும் இது பற்றி தெரியவில்லை என கூறினர். இரவு வேளையில் நடந்ததால் என்ன நடந்தது என்பது பற்றி எவருக்கும் தெரியவில்லை. வெள்ளப் பெருக்கின் காரணமாக கடலினுள் அலை இழுத்து சென்றிருக்குமோ அல்லது அல்லது யாரேனும் திருடிச் சென்றிருப்பார்களோ என்ற சந்தேகத்தில் உப்புவெளி காவல்துறையிடம் புகார் கொடுக்க சென்றபோது அவர்கள் எனது படகு இருந்த இடத்தை நேரில் வந்து பார்வையிட்டு இது பற்றி ஏதேனும் தகவல் கிடைக்கும் பட்சத்தில் எனக்கு அறிவிப்பதாக கூறினார்கள்.

நானும் எனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் இந்த வருமானத்தின் மூலமாகவே எமது அன்றாட தேவைகளை அதுவரை காலமும் பூர்த்தி செய்து வந்தேன். தற்போது அதுவும் இல்லாமல் போய்விட்டதே என கண்ணீர் மல்க மலைமுரசிற்கு பாதிக்கப்பட்ட அமிர்தலிங்கம் அசோகன் அவர்கள் தெரிவித்தார்.

படகின் விபரம்
நிறம்: நீலம், வெள்ளை
படகு இலக்கம் : OFRP - A - 3240 - Tco, BLACK HORSE
இப் படகு பற்றிய தகவல் கிடைக்கப் பெறின் இவ்விலக்கத்திற்கு தெரியப் படுத்தவும்.
0752954731, 052954733

(உதயா - அனுர)

## தெருவைக் கடக்கும் போது தொலைபேசினால் தண்டம்

தெருவையும், தொடருந்துக் கடவைகளையும் கடக்கும் போது விபத்தடையும் பெரும்பாலானவர்கள் கைத்தொலைபேசியில் பேசியபடி செல்கின்றார்கள் என்பதை புள்ளிவிபரங்கள் தெரிவித்ததை அடுத்து தொலைபேசியில் பேசிக் கொண்டே தெருவைக் கடக்க முற்படுபவர்களுக்கு அவ் இடத் தண்டம் (spot fine) வழங்கும் நடவடிக்கைகளைக் காவல்துறையினர் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிகின்றது.

## கழிவறையில் காமப்புணர்வு -பிக்கு சிறையில்-

கண்டி குட்செட் பேருந்துத் தரிப்பிடத்தின் கழிவறையில் பாடசாலை மாணவனை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் கைதான பிக்குவிற்கு விளக்கமறியல் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

பதின்மவயதுச் சிறுவனை கழிவறையில் வைத்துபிக்கு வன்புணர முயற்சித்துக் கொண்டிருக்கிறான் எனக் கிடைத்த தகவலை அடுத்து தலத்திற்கு விரைந்த காவல்துறையினர் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

## வெடிப்பொருட்களுடன் பார ஊர்தி -கடற்படையிடம் மாட்டு

12.09.20132 வியாழக்கிழமை அன்று 8 கிலோகிராம் நிறையுடைய டைனமைட் வெடிபொருட்களை ஏற்றிச் சென்ற பாரஊர்தி ஒன்று நிலாவெளிக்குச் செல்லும் வழியில் பெரியகுளம் பகுதியில் வைத்து கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு காவல்துறையினரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

விசாரணையின்போது இவ் வெடிபொருளை ஏற்றி வந்தவர் வெள்ளைமணல் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் மேலதிகமாக அவரின் வீட்டில் மேலும் 9 கிலோகிராம் நிறையுடைய வெடிபொருட்களும் கைப்பற்றப் பட்டுள்ளதாக காவல்துறையினர் கூறியதாக அறியக் கிடைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவைச் சமாளிக்கப் புதிய யுக்தி

சர்வதேச அளவில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச் சாட்டுகளை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் காலத்துக்கு காலம் புதிய புதிய உத்திகளைக் கையாண்டு வருகிறது. போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைக்கு எதிரான, போர்க் குற்றச் சாட்டுகளும், மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்ட போது, அவற்றை அடியோடு நிராகரிப்பதில் அரசாங்கம் உறுதியான கொள்கையைக் கடைப் பிடித்துவந்தது.

போரின் போது எந்த மீறல்களுமே நடக்கவில்லை, சர்வதேச சட்டங்களுக்கு அமையவே போரை நடத்தினோம் என்று அரசாங்கம் கூறிவந்தது. ஆனால், அரசாங்கத்துக்கு எதிரான பல போர்க்குற்ற ஆதாரங்கள் வெளியான நிலையிலும், சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வந்த நிலையிலும், அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால், போரின்போது எங்காவது சில மீறல்கள் நடந்திருக்கலாம், அதுகுறித்து விசாரிக்கப்படும் என்று மெல்ல சுருதியை மாற்றிக் கொள்ளத் தொடங்கியது. ஆனால், மீறல்கள் குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பை மட்டும் அரசாங்கம் வெளியார் யாருக்கும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை.

நாமே விசாரணை நடத்துகிறோம், குற்றங்கள் நடந்திருந்தால் கண்டுபிடிக்கிறோம் என்பதில் உறுதியாகவே இருந்தது. ஆனால், அதில் பெரிதாக எந்த முன்னேற்றமும் காணப்படாத நிலையில், ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றிய போது, சில விடயங்களில் விட்டுக் கொடுத்து நடந்தாக வேண்டிய நிலை உருவானது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பலவற்றை நடைமுறைப்படுத்துவதாக அரசாங்கம் அறிவித்ததற்குக் காரணம் அதுதான். ஆனாலும், இலங்கை அரசின் நடவடிக்கைகள் சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்தக் கூடியளவுக்கு இருக்கவில்லை என்பதே இப்போதுள்ள பிரச்சினை.

இதனால், இலங்கை அரசாங்கம் பல்வேறு குற்றச் சாட்டுகளை எதிர்கொண்டு வருகிறது. இந்தக் குற்றச்சாட்டுகளைச் சமாளிக்க அரசாங்கம் இப்போது, மற்றொரு வியூகத்தை வகுத்துள்ளது. குற்றங்கள், மீறல்களுக்கு சாட்சியங்கள் உள்ளதா - ஆதாரங்கள் உள்ளதா? என்று கேள்வி எழுப்புவதே இந்தப் புதிய உத்தி.

மனித உரிமை மீறல்களுக்கு ஆதாரங்களை அல்லது சாட்சியங்களைத் திரட்டுவது மிகப் பெரிய சிக்கலான விடயம். அதுவும் சாட்சிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்ட ஏற்பாடுகள் ஏதும் இல்லாத ஒரு நாட்டில், மனித உரிமை மீறல்கள் குறித்த ஆதாரங்களையும், சான்றுகளையும் திரட்டுவது மிகவும் கடினமான காரியம். பல சந்தர்ப்பங்களில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள் மட்டும் இருக்கும். சிலவேளைகளில் அதுவும் இருக்காது.

குறிப்பாக சட்டத்துக்குப் புறம்பான கொலைகளுக்குப் பெரும்பாலும் நேரில் கண்ட சாட்சியங்களும் இருக்காது, கொலை செய்யப் பட்டவர்கள் சாட்சியமளிக்க வரப்போவதுமில்லை. இத்தகைய மீறல்களுக்கு எந்த ஆதாரங்களும் இருக்காது.

அதுபோலவே, அடையாளம் தெரியாதவர்களாலும், முகமூடி அணிந்தவர்களாலும் கொல்லப்பட்டவர்கள், கடத்தப்பட்டு காணாமற்போனவர்களுக்கும் எத்தகைய ஆதாரங்களையும் சமர்ப்பிக்க முடியாது. எவருமே ஆதாரங்களை கொடுத்து விட்டு மனித உரிமைகளை மீறுவதில்லை.

அதுவும், முப்பதாண்டு ஆயுதப் போராட்டத்தை எதிர்கொண்ட ஒரு அரசாங்கத்தின் படையினர், ஆதாரங்களைக் கொடுத்துக் கொண்டு மீறல்களை இழைத்திருப்பர் என்று எதிர்பார்க்கவே முடியாது. எனவே தான், அரசாங்கம் துணிச்சலாக, ஆதாரங்களை சமர்ப்பித்தால் விசாரணை நடத்தலாம் என்ற துரும்பைத் தூக்கிப் போட்டது.

போரின் இறுதிக்கட்டத்தில் கொல்லப்பட்டவர்கள், காணாமற்போனவர்கள் குறித்து, எங்கிருந்து ஆதாரங்களைத் தேடிக் கொள்ள முடியும்?. பல நாட்கள் பதுங்கு குழிகளுக்குள், உணவு, குடிநீர் இன்றி வாடிப் போய், உயிர் மட்டும் தப்பினால் போதும் என்று, படையினரிடம் வந்து சேர்ந்தவர்களிடம் ஆதாரம் கேட்டால், எதைத் தான் கொடுக்க முடியும்?

போரின் இறுதிக்கட்டத்தில் புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள் எவரும் சரணடையவில்லை என்றும், எவரும் எவரையும் ஒப்படைக்கவில்லை என்றும் எழிலனின் ஆட்கொணர்வு மனு மீதான வழங்கில், இராணுவத் தரப்பு மேல்நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அவ்வாறு சரணடைந் திருந்தால் அவர்களுக்குப் படையினர் அவர்களைப் பொறுப்பேற்றதற்கான உறுதிச்சீட்டைக் கொடுத்திருப்பர் என்று இராணுவத் தரப்பு கொடுத்துள்ள விளக்கம் நகைப்புக்கிடமானது. போர்முனையில் சரணடையும் எவருக்காவது, உறுதிச்சீட்டுக் கொடுக்கும் வழக்கம் இலங்கையில் மட்டுல்ல, உலகில் கூட எங்கும் நடந்திருக்காது.

இந்த ஆட்கொணர்வு மனுக்களில், காணாமற் போனவர்களைத் தாம் படையினரிடம் ஒப்படைத்த போது பெருமளவு மக்கள் அதனைக் கண்டதாக கூறியுள்ளனர். இருந்தாலும், படையினருக்கு எதிராக அவர்களில் எத்தனை பேர் சாட்சியமளிக்க முன்வருவார்கள் என்ற கேள்வி உள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் பல சம்பவங்களுக்குச் சாட்சிகளாக இருந்தவர்கள், அச்சத்தின் காரணமாக நாட்டை விட்டும் வெளியேறி விட்டனர். எனவே, சரணடைந்தவர்கள் குறித்த ஆதாரங்களை தேடிப்பிடித்து அதற்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது சிரமமான காரியம் தான்.

இந்த விவகாரத்தில் மட்டுமன்றி, எல்லா விடயங்களிலுமே அரசாங்கம் ஆதாரம், சாட்சியத்தைத் தான் கேட்கிறது. அண்மையில், இலங்கைக்கு உண்மை கண்டறியும் களப்பயணத்தை மேற்கொண்டிருந்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையைச் சந்தித்த பலர், அச்சுறுத்தப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

கொழும்பில் மட்டுமன்றி, ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தைத் தொடக்கி வைத்து நிகழ்த்திய உரையிலும், நவநீதம்பிள்ளை இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியிருந்தார்.

அதற்கு. அவ்வாறு அச்சுத்தப்பட்டிருந்தால், அதற்கான ஆதாரங்களை சமர்ப்பித்தால், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கத் தயார் என்று அரசாங்கம் பதிலளித்துள்ளது. இத்தகைய அச்சுறுத்தல் குறித்த ஆதாரங்களை ஐ.நா மனித உரிமைகள் பேரவை சமர்ப்பிக்காது என்பது அரசாங்கத்துக்கு நன்றாகவே தெரியும்.

சாட்சிகளுக்கு உரிய பாதுகாப்பு இல்லாத சூழலில், அத்தகைய சான்றுகளை ஐ.நா வழங்க முன்வராது. அதனால் தான், அரசாங்கத்தினால் துணிச்சலுடன், ஆதாரங்களைக் கோர முடிகிறது. எவ்வாறாயினும், இலங்கையில் நடந்த மீறல்கள் தொடர்பான ஆதாரங்கள் ஏதுமில்லாமல் தான், அமெரிக்கா போன்ற நாடுகள், இலங்கை மீது குற்றச்சாட்டுகளைக் கூறுகின்றன என்று கருதிவிட முடியாது.

முள்ளிவாய்க்காலில் போர் நடந்த போது, அமெரிக்க செய்மதிகளும், ஐ.நா செய்மதிகளும், கண்களை மூடிக் கொண்டிருந்திருக்கவில்லை. போர் வலயத்தை, அவை படம் பிடித்துக் கொண்டிருந்தன.

அத்தகைய சில படங்கள் ஐ.நாவினால் வெளியிடப்பட்டும் உள்ளன. இன்னும் வெளிப்படுத்தப் படாத ஆதாரங்களும், படங்களும் ஐ.நாவிடமும், அமெரிக்காவிடமும் இருக்கலாம்.

உள்ளக செயல்முறைகளின் மூலம் இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூற நடவடிக்கை எடுக்காது போனால், சர்வதேச விசாரணை அழுத்தங்கள் அதிகரிக்கும் என்று. தெற்கு, மத்திய ஆசியாவுக்கான துணை இராஜாங்கச் செயலராக பெயரில் பரிந்துரைக்கப்பட்டுள்ள நி'ா தேசாய் பிஸ்வால், கடந்த வாரம் எச்சரித்திருந்தார்.

அத்தகையதொரு விசாரணைப் பொறிமுறை பற்றிய விவகாரம் வெடிக்கும் போது, அமெரிக்கா அந்த ஆதாரங்களை வெளியே தூக்கிப் போடலாம். இப்போதைக்கு அரசாங்கம், ஆதாரங்களை சமர்ப்பித்தால், விசாரிக்க முடியும் என்ற உத்தியை வைத்து, சர்வதேச சமூகத்தைச் சமாளிக்க முடிந்தாலும் அது நெடுநாட்களுக்கு கைகொடுக்குமா என்பது சந்தேகம் தான்.

கே. சஞ்சயன்

(நன்றி. தமிழ்மிரர்)

---

(சென்ற வாரத்தொடர்....)

**தமிழ்த் தேசயிக் கூட்டமைப்பின் வட மாகாண சபை வேட்பாளர் திரு. குருகுலராஜா அவர்கள் வணக்கம் லண்டன் இணையத் தளத்திற்கு வழங்கிய செவ்வி**
http://www.vanakkamlondon.com

கே: த. தே. கூ இத்தேர்தலில் வெற்றி பெற்றால் காணி மற்றும் போலீஸ் அதிகாரங்களை பெறுவதில் எவ்வாறான அழுத்தங்களை மத்திய அரசுக்கு கொடுக்கக்கூடியதாக இருக்கும்?

இத்தேர்தலில் நாம் வெற்றிபெற்றால் காணி. பொலிஸ் அதிகாரங்களைப் பெறுவதற்கு பலத்த அழுத்தங்களை அரசிற்குக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். பெரும்பான்மை எம்மிடமிருப்பதனால் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டு காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஆளுநரை மாற்றும்படி அரசிற்குத் தொடர் அழுத்தங்களை எம்மால் வழங்கக்கூடியதாக இருக்கும்.

கே: இந்திய அனுசரணையுடன் அறிமுகப்படுத்திய மாகாணசபை முறைமையில் தமிழர் தாயகமென்ற அடிப்படையில் இணைக்கப்பட்ட வட கிழக்கு மாகாணத்தை இன்று பிரிக்கப்பட்ட நிலையில் தேர்தல் எதிர்கொள்ளப்படுகின்றது, இது தமிழர்களின் குரலை நலிவடையச் செய்யும் என எதிர்பார்க்கிறீர்களா?

ப: வடக்கு கிழக்குப் பிரிக்கப்பட்ட நிலையில் தேர்தல் எதிர்கொள்ளப்பட்டாலும் இது தமிழர்களின் குரலை நலிவடையச் செய்யும் என நான் எதிர்பார்க்கவில்லை. வடமாகாணசபையும், கிழக்கு மாகாணசபையும் தனித்தனியாக முடிவெடுத்து தாம் இணைந்துகொள்ளும் முயற்சியில் இறங்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்காக இங்கு கிளிநொச்சியில் வந்து எம்முடன் இணைந்துள்ளனர். அவர்களுடைய ஏகோபித்த அபிலாசையும் எதிர்காலத்தில் வடக்கையும் கிழக்கையும் இணைப்பதுதான். இத்தேர்தலில் நாம் 2/3 பெரும்பான்மை வாக்கைப் பெறுவோமாயின் இந்த இணைப்பை ஏற்படுத்திக் கொள்வது சாத்தியமாக அமையும்.

கே: பல விமர்சனங்கள் எழுந்துள்ள மாகானசபை முறைமையில் குறிப்பாக மத்திய அரச பிரதிநிதியான ஆளுநரிடம் அதிக அதிகாரங்கள் குவிந்துள்ள நிலையில் வட மாகாண சபையை கைப்பற்றுவதன் மூலம் எதனைச் சாதிக்கலாமென கருதுகின்கிறீர்கள்?

ப:ஆளுநரின் கையோங்கியுள்ள நிலையிலும் நாம் அவரிடம் புதிய புதிய சட்டவாக்கங்களை அனுமதிக்காக சமர்ப்பிப்பதன் மூலம் அவரது அதிகாரத்தைப் பெறமுனையலாம். இது சாத்தியப்படாத சமயத்தில் அவரை பதவியிறக்கம் செய்ய எமது 2/3 பலத்தைப் பிரயோகிக்கலாம். உதாரணமாக இந்திய மாநிலங்களும் இவ்வாறான அதிகாரங்களைக் கொண்ட ஆளுநர்களையே கொண்டுள்ளனர். அங்கெல்லாம் மாநிலக் கட்சிகள் ஆட்சிபீடமேறி தமது மாநிலங்களை வெகுசிறப்பாக ஆட்சி செய்து வருகின்றனர். இதேபோல் இலங்கையின் மற்றைய மாகாண சபைகளிலும் ஆளுநர்களின் கெடுபிடி ஏதும் அற்ற நிலையில் மாகாண சபைகள் மக்களுக்குச் சேவைகளை வழங்கி வருகின்றார்கள். ஆனால் வடக்கிலும், கிழக்கிலும் மட்டுமே இவ்வாறான ஆளுநருடைய ஓங்கிய கை மாகாணசபையினுடைய செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலைக்குச் சென்றுள்ளது. எனவே முறையான அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் மூலம் இந்த விடயத்தில் நாம் வெற்றி காண்போம் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை மாவட்டக் கைதிகள் தின விழா

(உதயா-அனுர)

திருகோணமலை மாவட்ட சிறைக் கைதிகள் தின விழா 18.09.2013 அன்று காலை 10 மணியளவில் திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் நடைபெற்றது.


திருமலையில் முதல் தடவையாக சிறைச்சாலை ஒன்றிய சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த இவ்விழாவில் சிறைக்கைதிகளை சாரணர் இயக்கத்தில் இணைத்துக் கொள்ளும் நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து சிறைக்கைதிகளின் கொடி விநியோகம், பாடசாலை மணவர்களின் படைப்புக்கள் மற்றும் சிறைக்கைதிகளின் படைப்புக்களும் கற்றல்களையும் வெளிப்படுத்துவதுடன், பிரதேச விழாவும் கைதிகளின் கைவினைப் பொருட்களின் கண்காட்சியும், திரிசாரணர் கிண்ணம் சூட்டும் வைபவமும் இடம் பெற்றது.

இந் நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக கிழக்கு மாகாண சபை தவிசாளர் ஆரியவத்தி கலபத்தி, 22ம் படையணி தலைமை தளபதி பிரிகேடியர் செனவிரட்ண, சிறைச்சாலை உயர் அதிகாரி J.C வீரசிங்க,காவல்துறை உயர் அத்தியட்சகர்கள், கிழக்கு மாகாண சபை அதிகாரிகள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.



## கிழக்கின் வீதியமைச்சர் வீடு செல்லும் பாலத்தின் நிலை..



அட்டாளைச்சேனையின் பிரதான பாலம் 1978.10.28 டொக்டர்.ஜலால்தீன் பா.உ வால் ஆரம்பிக்கப்பட்டு 35 வருடங்கள் பூர்த்தியாகின்றது.

தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் செல்லும் பிரதான பாலமாகவும் வியாபாரிகள் பயணிக்கும் முக்கிய பாலமாகவும் இது அமைந்திருக்கிறது. சம்மந்தப்பட்டவர்கள் இதனைக் கண்டும் காணாமல் செல்லுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியினுடாக தினமும் தேசிய காங்கிரஸின் கிழக்கு மாகாண வீதியபிவிருத்தியமைச்சர் எம்.எஸ் உதுமாலெப்பையும், முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல். நஸீர் அவர்களும் தத்தமது வீடுகளுக்குச்செல்லும் பிரதான பாலமும் இதுவே இருந்த போதும் இதன் நிலை கடந்த தசாப்தங்களாக இவ்வாறே காணப்படுவதாகவும் இதற்கு அரசியல் கட்சி பாகுபாடே காரணம் எனவும் இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

(பி.எம். பர்ஹாத், அட்டாளைச்சேனை).



## எத்தனை காலம் தான்......?

சிலருக்கு நண்பர்கள் என்றால் வணங்கும் தெய்வங்களை விடமேல் நண்பர்களுக்காக எதையும் செய்ய தயங்கமாட்டார்கள். பலரின் வாழ்க்கை சீரும் சிறப்புமாக அமைவதற்கும், அவ்வாறே பலர் சீரழிந்து போவதற்கும், காரணமாக இருப்பவர்கள் அவர் அவர் தேடிக் கொள்ளும் நண்பர்களே.

அது ஒரு மூவின மக்களை சமமாகக் கொண்ட பிரதேசம். இனம், மதம், ஜாதி, என்பவற்றுக்கு அங்கு இடமே இல்லை. சகலரும் ஒன்றித்தே பழகுவார்கள். முஸ்லீம் இனத்தவருக்கு நல்ல நண்பனாக ஒரு தமிழர் இருப்பார். சிங்கள இனத்தவருக்கு நல்ல நண்பனாக ஒரு முஸ்லிம் இருப்பார். இவ்விதம் மாறி மாறி ஒவ்வொரு இனத்தவரும் மாறுபட்ட இனத்தவருடன். நட்பை வைத்திருப்பார்கள்.

பள்ளி செல்லும் பருவத்தில் ஆரம்பித்ததே அந்த இருவரின் நட்பு. ஒருவர் நல்ல வசதிகொண்ட குடும்பாத்தை சார்ந்தவர் மற்றவர் வசதியற்ற ஏழைக் குடும்பத்தை சார்ந்தவர். வசதியானவரைப் பொறுத்தவரையில் தான் உழைத்து பெற்றோர்களை கவனிக்க வேண்டிய பொறுப்புக்கு உட்படாது இருந்தார். வசதியற்றவருக்கும் அதே நிலைதான் காரணம் அவருக்கு ஐந்து மூத்த சகோதரர்கள் உள்ளனர். இவரே குடும்பத்தில் கடைசிப்பிள்ளை, என்பதால் பொறுப்பிலிருந்து இவர் முற்றாக விடுபட்டுள்ளார்.

எனவே இந்த இரண்டு நண்பர்களும் செல்லப் பிள்ளைகள் என்று கூறலாம். வசதியுள்ள நண்பன் உயர்தரம் வரை படித்திருந்தார். மற்றவர் எட்டாம் வகுப்புடன் பாடசாலை வாழ்க்கைக்கு முழுத்தரிப்பு வைத்து விட்டார். காரணம் மேற்கொண்டு படிக்க வசதியில்லை. அந்த எட்டாம் வகுப்பு வரை படிக்க உதவியவர் அவரின் வசதியான நண்பனே. இருந்தும் அவருக்கு தொடர்ந்தும் தொந்தரவு கொடுக்கக் கூடாதெனும் நோக்கத்தில் மேற்கொண்டு கல்வியை தொடர மனம் இடம் கொடுக்கவில்லை.

அந்த ஊரில் இந்த இரு நண்பர்களையும் கண்டு பலர் பொறாமைப்படுவார்கள். ஏனென்றால் எங்கு சென்றாலும் இருவரும் ஒன்றாகவே செல்வார்கள். வசதியுள்ள நண்பர் மிக அழகாக இருப்பார். மற்றவர் அழகு இல்லை என்று கூறமுடியாது சற்று சுமாராக இருப்பார்.

எப்படியோ வசதியுள்ளவர் காதல் வலையில் சிக்கிக் கொண்டார். அவரின் காதலை மற்ற நண்பர் அங்கீகரித்ததுமல்லாமல் எப்படியும் தனது நண்பனின் காதல் ஜெயிக்க வேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்டார். இரவு, பகல் என்று பார்க்காமல் அந்த காதலர்கள் மத்தியில் தூது கொண்டு செல்வதே அவரின் முக்கிய வேலையாக இருந்தது.

அப் பிரதேசத்தின் நகரசபையொன்றில் கங்காணியாக கடமைபுரியும் ஒருவரின் மகளையே வசதியுள்ள நண்பன் விரும்பி இருந்தார். அந்தப் பகுதியில் " குப்பை கங்காணி" என்றால், தெரியாத ஒருவருமே இல்லை என்றுதான் கூறவேண்டும். குப்பை அகற்றும் வேலைப் பகுதியில் அவர் வேலை செய்வதால் ஊரார் அவரை அவ்விதம் அழைத்து வந்தார்கள்.

அவருக்கு வெளியிலிருந்து வரும் தபாலில் கூட "குப்பை கங்காணி" என்றே எழுதப்பட்டிருக்கும் ஆனால் அவரின் சொந்த பெயர் என்றுமே குறிப்பிடப்பட்டிருக்காது. அவ்வளவுக்கு அவர் மிகவும் பிரபல்யமானவர். அத்துடன் இன்னுமொன்றையும் இரகசியமாகக் கூறத்தான் வேண்டும் என்னவென்றால் அவரின் நடவடிக்கைகளும் "குப்பை" போன்றதே. நல்லவைகளை எவரும் அவரிடம் இருந்து எதிர்பார்ப்பது மிக மிக கஷ்ரம். அவர் அவ்விதம் நடந்து கொள்வதற்கு காரணம் அவரின் வறுமையே. கடமையின் போது பொதுவாக வீதி ஓரத்தில், வீடுகளில் இருக்கும் குப்பைகளை அகற்றுவதை விட பெரிய ஹொட்டல்கள், வசதியான வீடுகள், பெரிய நிறுவனங்கள் ஆகியவற்றில் குவிந்திருக்கும் குப்பைகளை அகற்றும் நடவடிக்கைகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பார்.

எல்லாவற்றிற்கும் காரணம் " சம்திங்" தான் அதனால் ஏராளமான புகார்களும் அவருக்கு எதிராக நகரசபை அலுவலகத்தில் குவிந்து கிடப்பதையும் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

அந்த கண்காணியின் மகள்மார்களில் ஒருவரைத்தான் வசதியுள்ள நண்பர் காதலித்து வருகிறார்.

## ...நாட்டு நடப்பு...

அவருக்கு கண்காணியின் குடும்பத்தை பற்றி நன்கு தெரிந்து கொண்டும் ஏன் அந்த பிள்ளையை காதலிக்கிறார் என்று ஊரார் பேசிக்கொள்ளாமலும் அல்ல.

சிலர் காதலிப்பது கடைசி வரையும் தனது காதலியை கைவிடாது வாழ்வில் ஒன்று சேருவதற்கே. ஆனால் சிலர் பொழுது போக்கிற்காக இந்த காதல் விவகாரத்தில் இறங்கி அதை அர்த்தப்படுத்தாது அதன் புனிதத்தை கொச்சைப் படுத்தி இன்னுமொருவரின் வாழ்க்கையை சீரழித்து விடுகிறார்க்ள்.

எல்லாக் காதல்களும் வெற்றி பெறும் என்று சொல்வதற்கில்லை, காரணம் " திருமணங்கள் நிச்சயிக்கப்படுவது சொர்க்கத்திலே" என்பார்க்ள. ஆனால் இன்று அவை ரொக்கத்தில் (பணத்தில்) நிச்சயிக்கப்படுகின்றதையும் கவலையுடன் கூறவேண்டியுள்ளது. கங்காணியின் மகளின் காதல் முழு ஊரும் அறிந்த காதல். ஆனால் சில காலங்களாக அந்த இரு நண்பர்களின் கூட்டு சிநேகிதத்தை அங்கு காணக்கிடைக்க வில்லை.

கங்காணியின் மகளை காதலித்தவரும் இப்பொழுது ஊரில் காணக் கிடைப்பதில்லை. அவரின் நண்பர் கூட வெளியில் வருவதில்லை. காதல் விவகாரம் முற்றி விட்டதை அறிந்த அவரின் பெற்றோர் தங்கள் மகனை கனடாவுக்கு தொழில் நிமிர்த்தம் ஒருவருக்கும் தெரியாமல் அனுப்பி விட்டனர்.

இதை அறிந்த கங்காணியின் மகளுக்கு ஒப்பாரி வைத்து தேம்பி தேம்பி, அழுவதைவிட அவளால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. தனது ஆருயிர் நண்பன் அவளுக்கு இப்படியான ஒரு துரோகத்தை செய்து விட்டானே, என்பதை நினைக்கும் போது அந்த வசதியற்ற நண்பனால் அதை தாங்க முடியவில்லை.

ஏனென்றால் இவர்களின் காதலை உரம் இட்டு வளர்த்தவர் அவரல்லவா? அவரால் கங்காணியின் மகளை நேருக்கு நேர் பார்க்க கூட முடியவில்லை. அந்த கடும் துரோகத்திற்கு தானும் ஒரு காரணம் என்ற குற்ற உணர்ச்சி இரவும் பகலும் அவரை வாட்டி வதைத்தது. அவர் எடுத்த முடிவை நண்பனின் காதலி மனப்பூர்வமாக ஏற்காவிட்டாலும் அந்த முடிவுக்கு இசைவாக்கம் அடைய அவள் நிற்பந்தப் பட்டாள். வயதில் கூட அவள் 5 வயதிற்கு மூப்பாக இருந்தாள்.

இருவரும் திருட்டு திருமணம் செய்து கொள்வதே அந்த முடிவாக இருந்தது. குப்பை கங்காணியும் எப்படியும் ஒரு மகளை கரைசேர்த்து விட்டேன் என மனதிற்குள் ஆறுதல் அடைந்தார். இன்று அந்த தம்பதிகளுக்கு வயது வந்த மகள் ஒருத்தியும் இருக்கிறாள். சுமார் 15 வருடங்களுக்குப் பின் குறை மாதத்தில் ஒரு குழந்தை பிறந்து சுமார் 2 மாதங்கள் ICU வாட்டில் வைத்திருந்தும் சிகிச்சை பயனளிக்காது அண்மையில் அது இறந்து விட்டது. இறுதிச் சடங்கு கூட செய்வதற்கு அவர்கள் கையில் பணம் இல்லாததால் அரசின் வைத்தியசாலை செலவில் அக்குழந்தை அடக்கம் செய்யப்பட்டது.

- துட்டகைமுனு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# சபிக்கப்பட்ட நாயின் சாவு...

நிறங்கள் என் கண் முன்னே மாறிற்று. அழுத்தி மூடிக்கிடந்த பலூனின் வாய்க்கதவை என் தலை தள்ளத் தொடங்கிற்று.

யாரோ என்னை இழுக்கிறார்கள்.... பேரருவியாய் நீர் பலூனின் வாய் வழியே வழிய....குகை வாய் இடுக்கையகற்றி தலையை யாரோ இழுக்க, முனகி... முக்கி... யாரோ எனை வெளித்தள்ள..... "ஐயோ.... பயமாக் கிடக்கு... கண்முழுக்க வெளிச்சமடிக்குது... வாயத் திறந்து நான் கத்தப் போறன்" பிரசவ அறையிலிருந்து பீறிட்டுச் சிறுகுரலில் ஓர் குழந்தையின் அழுகை உலகில் வரவைப் பதிவு செய்தது.

''இஞ்சபார்... உண்ட பிள்ளைய...கொழுக்கு மொழுக்கெண்டு கனமாத்தான் இருக்கிறார்" கிழட்டு மருத்துவிச்சியின் குரலில் பெருமிதம் தெளிவற்றுக் கிடந்தது. "என்ன பிள்ளையெண்டு படமெடுத்துப் பாத்திருப்பியல் தானே... பொடியன் தான்....பால வடிவாக் குடு.... அவனுக்கும் நல்லம்... உனக்கும் நல்லம்" போகின்ற போக்கில் ஏனோ தானோ என்று சலிப்போடு பேசியதைப் போல மருத்துவிச்சியின் குரல் அவளுக்குக் கேட்டது.

"என்ர பிள்ளை... ...என்ற மகன்..." இழந்த இரத்தம் எல்லாம் ஒரு சேர ஊற்றெடுத்து உடல் முழுவதும் சுழன்றோட உத்வேகம் கொண்டு அவள் "என்ர பிள்ளை" என்று தன் மார்போடு இறுக்கினாள்.

"நான் என்ர கத்தலை நிப்பாட்டிப் போட்டன்" அமிர்தம் என் வாயினுள் சுரக்கும் போது அழுகை எதற்கு?.........

**அது** ஒரு நீண்ட தெரு... கரையோரங்களிற் கல்லுப் பெயர்ந்து மழை நீரால் மண்ணரிக்கப்பட்டு.. அவலட்சணமாய் இருந்தாலும்... பயணம் செய்பவரின் பலவர்ணத் துப்பல்களால் சிவப்பும், மஞ்சளும் வேறு ஏதேதோ எல்லாம் நிறம் படிந்து கிடக்கும் தெரு.

தெருவோர அந்தங்களின் வீடுகளிலிருந்து தூக்கியெறியப்படும் குப்பைகள் யாவும் சேர்ந்து புழுத்துப் போன மணமும்... புழுக்களும் சேர்ந்த குப்பைக் கிடங்கின் அருகே..... உறுமல்.......... நிறங்கள் பல கொண்ட நாய்கள்... சீழ் பிடித்த புண்களுடன்... மயிர் கழன்ற தோல்களுடன் .... நாற்றமடிக்கும் நாய்கள்... எறியப்படும் புதிய குப்பைக்காய் சண்டையிட்டுக் கொண்டிருக்க... ஓரமொன்றில் சபிக்கப்பட்ட பெண் நாயொன்று சோனை பிடித்த குட்டி நாயொன்றைப் பெற்றுப் போட்டது... இறந்து பிறந்ததைப் போல் அசைவற்றுக் கிடந்தது.. அந்த நாய்க்குட்டி.... இருள் கவிந்த பின் ஓர் சிணுங்கலை மட்டும் செய்தது.

மருத்துவச் சாலையிலிருந்து மூன்றாம் நாள் நான் வீடு வந்தேன். அம்மாவை அசைய விடாமல் பாட்டியும் சித்தியும் பற்றி காரிலிருந்து கீழே இறக்கினார்கள். என்னைக் காவிச்செல்ல ஆயிரம் கைகள்... அங்கங்கள் ஒவ்வொன்றையும் பற்றிய சிலாகிப்பு... "கண் அப்பரை மாதிரியே இருக்கு"... "காதுச் சுளியலைப் பாத்தியலே... தாத்தாவின்ற அதே சேப்" யாரோ சொல்ல பாட்டி சுவரில் சட்டமிட்டுப் பொட்டுவைத்திருந்த தாத்தாவின் படத்தை ஏக்கத்துடன் நோக்கினாள். பின் சிறுமூச்சொன்று விம்மியடங்க முகம் திருப்தியாய் பொக்கை வாயால் என் கால்களை எச்சில் படுத்தினாள்.

"கொட்டாவி விடுறான் ... பசிக்குது போலக் கிடக்கு... தம்பி இஞ்ச வா... மகனக் கொண்டுபோய் மனிசீட்டக் குடு..." மீண்டும் கைமாறக் கதகதப்பான அணைப்பு... கணப்பொழுதில் அமிர்தம்... கண்களை இமை மூடக் கறுப்பிருட்டில் கனவுகள்....

**வி**டியலில் சோணை பிடித்த குட்டிநாய் மெதுவாய் எழும்பியது. நடை தள்ளாட உறுதியின்றிப் போய் மலைக்குவியல் குப்பையில் விழுந்தது. மீள மெதுவாய் எழும்பி நாக்கைத் தொங்கவிட்டு புழுப்பிடித்த பண்டங்களை எல்லாம் நக்கத் தொடங்கிற்று.... திடீரென அருகே உறுமல்... சோணை நாயை அது நக்கிய புழுப்பிடித்த பண்டங்களின் சொந்தக்கார நாய் சினமேறிப் பார்த்துக் கொண்டிருந்தது...

உறுமல்.... அனுங்கல்....
உறுமல்.... ஊளை....
உறுமல்... உறுமல்..... குட்டி நாயின் சீவ மரணப் போர்... உயிர் வாழ்வதற்கான உணவுப் போர்.... அக்கணம் தொடங்கிற்று.

"இஞ்ச பாரன் ... முகத்தப்பாத்துப் பாத்து சிரிக்கறத... கொப்பர்... கொம்மாட முகமெல்லாம் பொடிக்கு விளங்குது தானே..."

"இஞ்சாருங்கோ... எங்க நிக்கிறியள்... இஞ்ச ஓடி வாங்கவன்... இவனப் பாருங்களன் குப்பிறத் திரும்பீட்டான்..." அம்மாவின் குரல் குதுாகலக் காண்டாமணியாய் ஊரெங்கும் அச்சேதி பரப்பிற்று.

"அடிக்....அடீக்... இதென்ன புதுசா ஒரு குட்டி நாயொண்டு வாசல்ல வந்து நிக்குது ... இப்பயே அதுக்குக் கழுத்துப் பக்கத்தில சிதல் வடியுது புண்ணால...." .... "அடிச்சுக் கலையுங்கோ..." "அடீக்...அடீக்" கல்லொன்று எழும்பி காற்றில் இலக்கின்றிப் பறந்தது. அந்தக் குட்டி நாய் மீண்டும் குப்பை மேட்டை நோக்கி ஓட்டமெடுத்தது. " இஞ்சாருங்கோ ... சாப்பாடு தீத்தேக்க கையக் கடிக்கிறான்... ஓம் பல்லு முளைச் சிட்டுது"

குடையின் நடுவே நான் குந்தியிருந்தேன். உறவுகள் கூடி வீட்டு விறாந்தையை நிறைத்திருக்க குடை மீது எதுவெதுவோ கொட்டப்பட்டது. எதுவுமே என் விரல்களுக்குள் அடங்கா வடிவங்கள்... ஒன்று மட்டும் பிடிபடவே நான் அதை எடுத்து வாய்க்குள் ஓட்டினேன்.

" அம்மாடி .... இப்பவே பொடியன் பென்சில எடுக்கிறான்... கடும் கெட்டிக்காரந்தான்...." யாரோ சொல்ல முத்தங்களை அள்ளித் தெளித்தார்கள் உறவுகள்.

**மி**ஞ்சிப்போன கொத்துரொட்டிப் பறியொன்று குப்பை மேட்டில் வீசப்பட்டது. அந்தத் தெருவின் அந்தமொன்றிலுள்ள வீட்டில் பல் முளைத்த விழாவில் எறிபவற்றைச் சாப்பிடக் கூடியிருந்தன நாய்கள்.... குப்பையில் எறியப்பட்ட பறியின் முன்னே எஞ்சி நிற்கின்றது சபிக்கப்பட்ட சத்தியிழந்த பெண்நாயும் ... சோணை பிடித்த நாய்க் குட்டியும்....

உறுமல்..... தக்க வைப்பதற்கான உறுமல்....
ஊளை..... நாக்கு நுனியல் வழியும் எச்சில் துளிகளின் ஊளை...



நேருக்கு நேர் மோத வலுவற்ற நாயிரண்டும் உறுமிக் கொண்டே ஆளுக்கோர் பக்கமாய் ரொட்டிப் பையை இழுத்துப் பியத்தன... கிடைத்ததைக் கொண்டு ஓரங்களுக்குள் ஒதுங்கிக் கொண்டன.... கிடைக்காததையிட்டு ஊளையிட்டன.

"ஆ.... வெட்டுங்கோ... கேக்கை வெட்டி அப்பாக்குத் தீத்துங்கோ... எங்க...எங்க.... இந்தா... இந்தா... அச்சாக்குட்டி" .

அன்றும் வீட்டின் மூலையில் எறிபவற்றைச் சாப்பிட ஒன்றாகின நாய்கள்... கழுத்திற் சிதல் வடியும் புண் கொண்ட நாயொன்று தனது பங்கைப் பிரித்துச் செல்லும் வைராக்கியத்துடன் உறுமத் தொடங்கிற்று...

எனக்கான விழாக்கள் ஆண்டொன்றில் பல வந்தது. அரிசியில் எழுதிய ஒரு நாள்.... ஆரம்பப் பாடசாலைக்கொருநாள்.... நிறக் காட்சட்டைக்கும் வெண்ணிறச் சேட்டுக்கும்....

ஆண்டுகள் இறந்து அகவைகள் பிறக்க ஒன்று... புலமைப்பரிசிற் பரீட்சைக் கொன்று....பத்தாம் வகுப்புப் பெறுபேற்றுக் கொன்று... விழாக்களின் போதெல்லாம் சிரித்தும் சந்தோசித்திருந்தும் இருந்த நான் காலம் சில உறவுகளின் பெயரை அழித்த போதெல்லாம் மட்டும் அழுதேன்...

நாய்களோ அவ்வனைத்து நாட்களிலும் எறியப்படுபவைக்காய் கடித்துக் குதறிக் கொண்டன...

அவர்கள் காக்கி உடை அணிந்திருந்தார்கள்... பச்சை நிறத் தொப்பி... புரியாத மொழி... கைகளிலோ கொலைக்கருவி....

அவர்களால் எனது பயணம் அன்று நிறுத்தப்பட்டது.... கிலி கால்களை நடுங்கச் செய்ய குதித்திறங்கினேன் சைக்கிளிலிருந்து....

"புரியாத மொழி"
"எங்க போறாய்" ....
"......."
"பாக்கில என்ன"
"புக்ஸ்" " எங்க இருக்கிறனி"
"........."

அருகில் அவர்கள் நெருங்க நாக்குக் குளறத் தொடங்கிற்று..." என்ர பேர்..... நான் ஒரே பிள்ள.... அம்மா டீச்சர்... அப்பா வயச் செய்ரார்..... இஞ்ச பக்கத்தில தான் இருக்கிறன்....சந்தியால திரும்பி நீல கேட்.....மூண்டாவது வீடு....... கோயிலுக்கு முன்னுக்கு...." வார்த்தைகள் தெளிவற்றுப் புலம்பலாய் விழுந்தது... சந்தேகம் வலுத்தது அக்காகியுடைஞனுக்கு ... கேள்விகள் கொத்தாக விழுந்தன.. "எந்த ஸ்கூல்... ஆர் டீச்சர்... எத்தனை வயசு .....அவனுகள் வாறவங்களா ஸ்கூலுக்கு... நீ என்ன கொண்டு போய்க் குடுக்கிறனி... காச்சட்டைக்க என்ன வச்சிருக்கிறாய்...."

"பயப்பிடுறான்.... நாய்... இவனுக்குத் தொடர்பிருக்கு... இல்லாட்டிப் பயப்பிட மாட்டான்...."

"உனக்குச் சம்பந்தமிருக்கு.... இல்லையா.... ஓமா......இல்லையா.... ஓமா...... இல்லையா.... ஓமா...... ஓம்தானே....ஓம்தானே.... ஓம்தானே...." கேள்விகளின் முடிவில் ஓங்கியறைந்து என்னை நிலத்தில் வீழ்த்தினார்கள்.

"ஆரும் என்ற பிள்ளைக்கு அடிக்கக்கூடாது... சரியா...."

"அவன் நடந்து பழகுறான்... கீழ விழாமப் பாத்துக்கொள்ளுங்கோ..."

"குழந்தைக்கு ஏதும் நடந்துதெண்டா ... வீட்டில இருக்கமாட்டீர்"

நிலத்தில் குப்பிற வீழ்ந்து கிடந்த அவனின் முகத்தைத் திருப்பி அவர்கள் அவன் கண்ணின் ஊடே உண்மையைத் தேடினார்கள்...

மிருகம்..... அவர்கள் தேடிய மிருகம்.... அவர்களுக்கென்னவோ அவன் கண்ணினுள்ளே அந்த மிருகம் தெரிந்தது..... அரச மரத்தையும்... அதனினத்தையும்... கருவறுக்கும் மிருக முகம்...

திரும்பிக்கிடந்த முகத்தின் மீது கொலைகருவிப் பிடியினால் ஒரேயடி... "அம்மோவ்" பீறிட்டுப் பெருங்குரலில் ஓரழுகை... உடைந்து தெறித்தன பற்கள்...

"கொட்டின கொழுக்கட்டயப் பிள்ளையாருக்கும் கொட்டினதால என்ற பிள்ளைக்கு முத்து முத்தாப் பல்லுகள் .... பாத்தியலே"

எனக்கு உலகம் இருண்டது.... கால்கள் இரண்டையும் பற்றி யாரோ இருள் சூழ்ந்த முகாமினுள் இழுத்துச் சென்றார்கள்....

அம்மா அந்த முகாம் வாசலில் மண்ணுக்குள் பிரண்டு அழுகின்றாள்.. " ஐயோ... என்ர பிள்ளைய விட்டிருங்கோ... அவனுக் கொண்டும் தெரியாது...அவன நாங்கள் பொத் திப் பொத்தி வளத்தம்... ஐ.யோ.....என்....ர ...பிள்...ளைய விட்டிருங்கோ."

அதே முகாமின் வாசலில் சத்தியிழந்து சபிக்கப்பட்ட பெண் நாய் செத்துக் கிடந்தது......



அந்த இரவில் ... எனது தெருவின் குப்பை மேட்டுக்கருகில் கைகள் பின்னால் கட்டப்பட்டு தலையில் சுடப்பட்டு நான் வீசியெறியப் பட்டேன்.... நாய்கள் எவையுமில்லை அங்கு... கழுத்தில் சீழ் பிடித்து.... தோல் மயிர் எல்லாம் இழந்த சொறிநாயொன்று மட்டும் எனது உதிரத்தை நக்கியபடி அருகிலிருந்தது....

**மாயன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ நூறு!

'மீன்' என்றான் 'ஐநூ' றென்றான்,
மிக விலை வேண்டாம் என்றேன்!
'கூன் இறால்' 'நாநூ' றென்றான்,
குறைவு தான் 'வாய்வாம்' என்றேன்!
'ஊன் கோழி' முந்நூ' றென்றான்,
ஒரு பல்லும் கிடையா தென்றேன்!
தீன் யாதோ இன்றைக் கென்றான்,
சிறு 'பொன்னாங்காணி' என்றேன்!

'கத்தரிக்காயாம்' என்றான்,
கத்தினேன் விலையைக் கேட்டு!
பத்திய 'முருங்கை' ஒன்றில்
பாதி ஓர்'இருநூ' றென்றான்!
'கொத்தவரைக்காய்' மிச்சம்
குறைவுதான் 'நூறாம்' என்றான்!
எத்தனையோ சொன்னான், நான்
இறுதியில் 'பொன் -ஆம்-காண் -நீ!'

**தாமரைத் தீவான்**
(ஈச்சந் தீவு – கிண்ணியா)

## சுமைகள்

பறக்க முடியாத பறவைக்கு
இறகுகள் சுமை

நடக்க மறுக்கும் கால்களுக்கு
பாதங்கள் சுமை


துயில் விரும்பாத விழிகளுக்கு
இமைகள் சுமை

நினைக்க முடியாத இதயத்திற்கு
கனவுகள் சுமை

மறக்க முடியாத உன் மனதிற்கு
என் வாழ்வே சுமை..

**வி.லம்யா**
**பன்ரத்தோட்டம்**





**உன் விரல் பிடித்து**
**நடந்திட வேண்டும்.**

கடலலைகள் குதித்து
வரவேற்க

காற்று கேசம் கலைக்க
கடற்கரை மணலில்

கால்கள் புதைய உன்
விரல் பிடித்து
நடக்க வேண்டும்

அலையின் தழுவலும்
காற்றின் ஸ்பரிசமும்
நாணிப் போகும் வரை

உன்னோடு
உன் விரல் பிடித்து
நடக்க வேண்டும்.

**ஜே. மதிவதனி**

## வரலாற்றில் தம்பலகாமம் – பாகம் 6 –

தம்பை நகர் என்று திரிகோணாசலப் புராணம் சிறப்பித்துக்கூறும் கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்திருக்கும் நீர்வள, நிலவளச் சிறப்பைக் கொண்டமைந்த தம்பலகாமம் என்னும் கிராமத்தின் இடப்பெயர் ஆய்வின் ஒரு பகுதியாக "தம்பலகாமம்" என்னும் ஊரின் வரலாற்றுத் தொன்மைதனை இதுவரை சுருக்கமாகப் பார்த்தோம்.

**கரிய குவளைத் தளிர் மேய்ந்து**
**கடைவாய் குதட்டித் தேன் ஒழுக**
**எருமை கிடந்து மூச்செறியும்**
**எழிலார் தம்பை வளநாட்டில்**

(திரிகோணாசல புராணம் )
"தம்பலகாமம்" என்பது,(தம்பல் + காமம்)
"தம்பல்" - சேறு ( தம்பலடித்தல் - பயிரிடுதல், உழவு செய்தல்
தம்பலாடல் - சேறடித்தல் அல்லது சேறாடால் )
"காமம்" - ஊர் ( Village; ஊர்.
2. Inhabitant ; குடி. )



என்ற காரணப்பெயராக அமைந்து வரலாற்றுக் காலம் முதல் வழங்கி வருவதைக் காணலாம். தம்பலகாமம் என்னும் ஊரின் பெயரினைக் குறிப்பிடும் முதலாவது தமிழ் ஆவணம் தம்பலகாமம் கல்வெட்டு ஆகும். இச்சாசனம் 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கலிங்க மாகனின் ( 1215 - 1255 ) ஆட்சிக்காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது.

பேராசிரியர் திரு.சி.பத்மநாதன் அவர்களால் வாசிக்கப்பட்ட சாசனத்தில் 9 ஆவது வரி கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது.

9. தம்பலகாம ஊ(ர்)

எனவே தம்பலகாமம் என்னும் பெயர் புராதனமானது. அது ஏறக்குறைய 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சாசன வழக்கில் இருந்ததை மேற்கூறிய தம்பலகாமம் கல்வெட்டு மூலம் அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. எனினும் பின்வந்த நாட்களில் தம்பல் + கமம்

தம்பல்" - சேறு
கமம் - பயிர்செய்கை நிலம் , வயல்

என்ற அடிப்படையில் தம்பல்கமம் என்றழைக்கும் வழக்கம் ஒரு பகுதியினரால் முன்னெடுக்கப்பட்டு, இன்றுவரை தொடர்ந்து வருகிறது. இதற்கு ஆதாரமாக திரு.வே. அகிலேசபிள்ளை அவர்களால் 1889 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட திருக்கோணாசல வைபவம் என்னும்

## தம்பலகாமப்பற்று வன்னிமையும், தேசவழமையும்

நூலினை ஆதாரமாகக் கொள்வர்.

திருகோணமலை மாவட்ட ஒல்லாந்து ஆளுனர் Jacques Fabrice van Senden அவர்களின் திருகோணமலை மாவட்ட சுற்றுப்பயண அறிக்கையில் ( 15.05.1786 - 21.06.1786 ) அவரது தம்பலகாமப்பற்று விஜயத்தின்போது 12.06.1786 அன்று தம்பலகாமதின் வயல்வெளியில் இருந்த கல்வெட்டைப் பார்க்கச் சென்றதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

அக்கல்வெட்டின் காலத்தை கணிப்பிடுவது சாத்தியமற்றதாக இருந்ததோடு , அதில் இருந்தவற்றை வாசிப்பதற்கு அங்கு வாழ்ந்த மக்கள் உதவவில்லை என்பதையும் தனது சுற்றுப்பயண அறிக்கையில் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஏறக்குறைய எண்ணூறு வருடங்களுக்கு முற்பட்ட காலங்களிலிருந்து வழக்கிலிருந்த "தம்பலகாமம்" என்ற இடத்தின் பெயர் தம்பலகாமம் என்பதா ? அல்லது தம்பலகமம் என்றழைப்பதா ? என்ற குழப்பத்திற்கு உள்ளானதற்கு தம்பலகாமம் கல்வெட்டு வாசிக்கப்பட்டதில் இருந்த நீண்ட தடங்கலும் ஒரு காரணமாகும்.

1930 ஆம் ஆண்டு தொல்பொருள் திணைக்களத்தினரால் திருகோணமலையிலுள்ள "தம்பலகாமம்" என்னும் ஊரில் கண்டெடுக்கப்பட்ட இத்தமிழ்க் கல்வெட்டின் மைப்படி சுமார் 73 வருடகாலம் தொல்பொருள் திணைக்களத்தில் கவனிப்பாரற்றுக் கிடந்து 2005 ஆம் ஆண்டளவில் பேராசிரியர் திரு.சி.பத்மநாதன் அவர்களால் வாசிக்கப்பட்டது.

பின்னாட்களில் 1980 களில் ஆதிகோணநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றவேளை மேற்படி சர்ச்சை மீண்டும் எழுந்தது. இதன்போது ஆலய நிர்வாகசபையின் வேண்டுகோளுக்கிணங்க மறைந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள், பனங்காமம்,கொடிகாமம், வீமன்காமம், எனும் பெயர்களை மேற்கோள்காட்டி, தம்பலகாமம் என அழைப்பதே சரியென நிறுவினார். அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட ஆதிகோணநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக மலரின் முன்னட்டைப்படம் கீழே.




அதைவிடவும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களால் மேற்குறித்த நிகழ்வில் சொல்லப்பட்ட ஒரு எதிர்வு கூறலை மீட்டுப்பார்த்தல் அவசியமாகும்..

தம்பலகாமம் என்னும் புராதனமான பெயரை தம்பலகமம் என பெயர்விளித்துவருங்கால், அது பின்னாட்களில் தம்பலகமம்,தம்பலகம, தம்பலகமுவ எனப் பெயர்மாற்றம் செய்ய இலகுவாக இருக்கும் என்பதையும் 1980 காலப்பகுதியில் குறிப்பிட்டிருந்தார். மேற்படி நிகழ்வு 2006 ஆண்டில் இணையத்தில் திரு.மலைநாடான் அவர்களால் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

வரலாற்றை அறிதல் என்பது




வெறுமனே பழம் பெருமை பேசுவதற்காக அல்லாமல் நமது முன்னோர்களின் பண்பாட்டு விழுமியங்களை எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துச் சென்று அதனூடாக நமது சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவுவதாய் இருத்தல் வேண்டும்.

ஏழு பகுதிகளைக்கொண்ட இந்த இடப்பெயர் ஆய்வும், வரலாற்றுத் தேடலும் தம்பலகாமம் என்னும் ஊரின் 10% பகுதியையே உங்கள் முன் கொண்டுவந்திருக்கிறது. இன்னும் ஆராயப்படாத வரலாற்றெச்சங்கள் தம்பலகாமத்திலும் அதனைச் சூழ்ந்த பிரதேசங்களிலும் பரவிக்கிடக்கிறது.

சுயாதீனமான,தலையீடுகளற்ற தொல்பொருள் ஆய்வுகள் மூலமே மிகுதிப்பகுதி வரலாற்றினை நாம் அறியக்கூடியதாக இருக்கும். அதுவரை தம்பலகாமம் என்னும் வரலாற்றுப்புகழ் கொண்ட ஊரின் வரலாற்றுப் பாரம்பரியங்களைக் காப்பதும், வளர்ப்பதும் தூரநோக்கு கொண்ட இளைஞர்களின் கைகளிலேயே இருக்கிறது.

ஆதாரங்கள்

1. காலனித்துவ திருகோணமலை - கனகசபாபதி சரவணபவன் 2003

2. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - பேராசிரியர்.சி.பத்மநாதன்.2006.

3. தம்பலகாமத்துக் கல்வெட்டுப் பற்றிய புதிய சிந்தனைகள் - வே. தங்கரா

வாரம் தோறும் இத்தொடர் கட்டுரையினைப் பிரசுரித்து ஊக்கப்படுத்திய திருகோணமலையில் இருந்து பிரசுரமாகும் மலைமுரசிற்கு எனது நன்றிகள்.

நட்புடன் ஜீவன்.

**–வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்–**

முற்றும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## நடிகரோடு சின்மயிக்கு டும் டும்



நடிகரை திருமணம் செய்யப்போகிறார் பிரபல பின்னணி பாடகி சின்மயி. மணிரத்னம் இயக்கிய கன்னத்தில் முத்தமிட்டால் படத்தில் ஒரு தெய்வம் தந்த பூவே பாடல் மூலம் ஏ.ஆர்.ரஹ்மானால் அறிமுகமானவர் சின்மயி.

பாடிய முதல் பாடலுக்காக பல விருதுகளைப் பெற்ற சின்மயி தொடர்ந்து பல படங்களில் பாடினார். சமீபத்தில் வாகை சூட வா படத்தில் சர சர சாரக்காத்து பாடல் பாடியதற்காக நிறைய விருதுகளைப் பெற்றார். பூமிகா, பத்மப்ரியா, சமீரா, கங்கனா ரணாவத், சமந்தா, காஜல் அகர்வால் என்று பல நாயகிகளுக்கு டப்பிங் பேசியிருக்கும் சின்மயி தற்போது திருமணத்துக்குத் தயாராகிவிட்டார். மாஸ்கோவின் காவிரி படத்தின் மூலம் நாயகனாக அறிமுகமான ராகுல் ரவீந்திரனைக் காதல் திருமணம் செய்துகொள்ளப் போகிறார். சின்மயி- ராகுல் திருமணத்துக்கு இரு வீட்டாரும் சம்மதித்துவிட்டனராம். ராகுல் "வணக்கம் சென்னை" படத்தில் நடித்து முடித்த வேகத்தோடு தெலுங்குப் படங்களில் நடித்து வருகிறார். அடுத்த மாதம் நிச்சயதார்த்தம் நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் பிப்ரவரி மாதம் டும் டும் என்றும் சின்மயின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

## ஹாட்ரிக் வெற்றியில் சிவகார்த்திகேயன்

சிவகார்த்திகேயனின் வருத்தப்படாத வாலிபர் சங்கம் திரைப்படம் வசூலை அள்ளிக்குவிக்கிறது. எஸ்கேப் ஆர்டிஸ்ட் பி.மதன் தயாரிப்பில் பொன்ராம் இயக்கிய படம் வருத்தப்படாத வாலிபர் சங்கம். இந்தப் படத்தில் சிவகார்த்திகேயன் ஸ்ரீதிவ்யா ஜோடியாக நடிக்க இயக்குனர் எம்.ராஜேஷ் வசனம் எழுதியுள்ளார்.

சென்ற வெள்ளிக் கிழமை வெளியான இந்தப் படம் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று ஓடிக்கொண்டிருக்கிறது. படம் வெளியான நான்கு நாட்களில் 13 கோடி ரூபாய் வசூல் செய்து சாதனை படைத்திருக்கிறது. சிவகார்த்திகேயன் நடித்த படங்களிலேயே அதிக வசூல் செய்த படம் என்ற பெருமை வருத்தப்படாத வாலிபர் சங்கத்திற்கு கிடைத்திருக்கிறது..

## கவர்ச்சி ஆடைகளை விரும்பும் தமன்னா



கவர்ச்சி உடைகளே எனக்கு பொருத்தமாக உள்ளது என்கிறார் நடிகை தமன்னா. தமிழில் கேடி படத்தின் மூலம் அறிமுகமானவர் தமன்னா. அதைத்தொடர்ந்து கல்லூரி என்ற படத்தில் நடித்ததன் மூலம் பிரபலமானார்.

தொடக்கத்தில் குடும்ப பாங்கான உடையுடன் நடித்த அவர் தற்போது கவர்ச்சி உடைகளுக்கு மாறியுள்ளார். தமிழ் படங்களில் கவர்ச்சிக்கு எல்லை வைத்திருந்த அவர் தெலுங்கில் அதை மீறி அரை குறை ஆடையில் ஆபாசமாக நடிக்கிறார். இந்தியில் தற்போது இரண்டு படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார். அங்கும் கவர்ச்சி மழையில் நனைகிறார். இதுகுறித்து தமன்னாவிடம் கேட்டால் என் உடல்வாகுக்கு கவர்ச்சி உடைகள் பொருத்தமாக இருக்கின்றன. வயிறு தொடை பகுதிகளை அழகு படுத்தி காட்டுகின்றன. எனவே கவர்ச்சி ஆடைகளை அணிகிறேன் என்கிறார்.



### ஹாலிவுட் கனவில் ஜீவா

தனது அடுத்த கட்டத்தை ஹாலிவுட்டில் நகர்த்தலாம் என்று திட்டம் தீட்டி வருகிறாராம் ஜீவா.கோ பட வெற்றியைத் தொடர்ந்து ஜீவாவின் கைவசம் இரண்டு படங்கள் உள்ளன. அகமத் இயக்கத்தில் என்றென்றும் புன்னகை படத்தில் நடித்து வருகிறார். ரொமாண்டிக் பொழுதுபோக்கான இந்த படத்தில் இவருக்கு ஜோடியாக த்ரிஷா நடிக்கிறார். மற்றொரு படம் யான் இதில் நாயகியாக துளசி நாயர் நடிக்கிறார். இரண்டு படங்களுக்குமே ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார். தற்போது ஹாலிவுட்டிலும் கால் வைத்துவிடலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறாராம் ஜீவா.அதற்கான திட்டங்களையும் வகுத்து வருகிறாராம்.

### மீண்டும் சித்தார்த்துடன் சமந்தா

மீண்டும் சித்தார்த்துடன் ஜோடி சேரப்போகிறாராம் சமந்தா. சித்தார்த்துடன் சமந்தாவுக்கு திருமணம் என்று வதந்திகள் கிளம்பி தற்போது அது ஓய்ந்துள்ளது.

இந் நிலையில் மீண்டும் சமந்தாவும், சித்தார்த்தும் ஜோடி சேரப்போகிறார்களாம்.

படத்தில் ஜோடி சேரவில்லையாம், சோப்பு விளம்பரத்திலாம். பிரபல நிறுவனமான லக்ஸ் இப்போது சமந்தாவையும் ஒப்பந்தம் செய்துள்ளது.

## வருத்தப்படாத வாலிபர் சங்கம்



'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' ஜாலியான பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த குடும்பத்துடன் சேர்ந்து முகம் சுழிக்காமல் பார்க்கக்கூடிய காமெடியான படம் என்று சொன்னால் அது மிகையாகாது.

திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்த அழகான ஊர்தான் சிலுக்குவார்பட்டி. அங்கே வருத்தப்படாத வாலிபர் சங்கத்திற்கு தலைவராக சிவகார்த்திகேயனும் செயலாளராக சூரியும் இருக்கின்றனர். இதே ஊரின் தலைவராக சத்யராஜ் வருகிறார். இவருக்கு 3 பெண்கள் உள்ளனர். ஊரில் ஏற்படும் வாய்த்தகராறில் சத்யராஜ் தன்னுடைய பெண்கள் யாரையும் காதலித்து ஓடிப்போய் திருமணம் செய்துகொண்டால் காதை அறுத்துக் கொள்வேன் என சபதம் கொள்கிறார். இதனால் தன்னுடைய இரண்டு மகள்களுக்கும் அவசர அவசரமாக அவர்கள் படிக்கும் வயதிலேயே திருமணம் செய்து வைத்துவிடுகிறார்.

3-வது பெண்ணான நாயகி ஸ்ரீதிவ்யாவுக்கு திருமணம் செய்து முடித்துவைக்க முடிவு செய்யும் வேளையில் சிவகார்த்திகேயன் நுழைந்து இந்த திருமணத்தை நிறுத்தி விடுகிறார். இதனால் சிவகார்த்திகேயனுக்கும் சத்யராஜுக்கும் மோதல் ஏற்படுகிறது. மறுபுறம் சிவகார்த்திகேயனை ஸ்ரீதிவ்யா ஒருதலையாக காதலிக்க ஆரம்பித்து விடுகிறார். ஆனால் சிவகார்த்திகேயனோ அதே ஊரில் டீச்சராக வேலை பார்க்கும் பிந்துமாதவியை ஒருதலையாக காதலிக்கிறார். பிந்துமாதவியோ இவரது காதலை ஏற்காமல் வேறு ஒருவரை திருமணம் செய்துகொண்டு போய்விடுகிறார்.

காதல் தோல்வியில் மனம் நொந்து வாடும் சிவகார்த்திகேயன் கோவில் திருவிழாவின்போது ஸ்ரீதிவ்யாவை சேலையில் பார்த்ததும் சொக்கிப் போகிறார். இதனால் அவள்மீது காதலிலும் விழுகிறார். இருவரும் தங்கள் காதலை பரிமாறிக்கொண்டு வானம்பாடி பறவைகளாய் சுற்றித் திரிகின்றனர். இருவரும் காதலிப்பது ஒருநாள் சத்யராஜ் காதுகளுக்கு போகிறது. இவர்களுடைய காதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார். பின்னர் சிவகார்த்திகேயன்-ஸ்ரீதிவ்யா காதல் என்னவாயிற்று? சத்யராஜ் இவர்களை ஒன்று சேர்த்து வைத்தாரா? என்பதே மீதிக்கதை.

சிவகார்த்திகேயன் தன்னுடைய வழக்கமான பாணியில் நக்கல் நையாண்டி டைமிங் காமெடி என படம் முழுக்க ஸ்கோர் செய்கிறார். படத்தில் இரண்டு ஹீரோக்கள் என்றுதான் சொல்லவேண்டும். சிவகார்த்திகேயனுக்கு படத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் சமஅளவு பங்கு 'பரோட்டா' சூரிக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இருவரும் சேர்ந்து செய்யும் ரகளை வயிறு குலுங்க சிரிக்க வைக்கிறது. சத்யராஜ் 'சிவனாண்டி'யாகவே வாழ்ந்திருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். படம் முழுவதும் கெத்தாக வலம் வருகிறார். ஸ்ரீதிவ்யா அழகான கிராமத்து பெண்ணாக படம் முழுக்க வலம் வருகிறார். படத்தில் இவரது நடிப்பை வெளிக்காட்ட வாய்ப்பு இல்லாவிட்டாலும் கொடுத்த வாய்ப்பை திறம்பட செய்திருக்கிறார். காதல் காட்சிகளில் இவருடைய கண்கள் அலைபாயும் அழகை ரசிக்கும்படியாக இருக்கிறது.

தொடர்ந்து காமெடி படங்களை கொடுத்து ஹிட் அடித்த ராஜேஷின் உதவியாளர் பொன்ராம் இயக்குகிறார் என்றதும் படத்தின் மீது ரொம்பவும் எதிர்பார்ப்பு இருந்தது. அந்த எதிர்பார்ப்பை பொன்ராம் முழுமைப்படுத்தியிருக்கிறார். பழகிப்போன கதையை சாயம் பூசி சரிசெய்திருந்தாலும் ரசிக்கும்படியாக வைத்ததில் கைதட்டல் பெறுகிறார். படத்தோட கதையை யோசிக்கவிடாமல் அடுத்தடுத்து பரோட்டா சூரியின் நகைச்சுவையுடன் படத்தை நகர்த்தியதற்காக இவரை பாராட்டியே ஆகவேண்டும்.டி.இமான் இசையில் பாடல்கள் அனைத்தும் ஏற்கெனவே ஹிட் அடித்திருந்தாலும் அவற்றை காட்சியப்படுத்திய விதம் ரொம்பவே ரசிக்க வைக்கிறது.

மொத்தத்தில் 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' யாரையும் வருத்தப்பட வைக்காமல் கலகலப்பாக்கியிருக்கிறது

## கரீனாவுக்கு இன்னொரு கல்யாணமா?

மீண்டும் திருமண பந்தத்தில் இணையப்போகிறாராம் கரீனா கபூர். கரீனா கபூரும் இம்ரான் கானும் இணைந்திருக்கும் புதிய படம் கோரி தேரே பியார் மெயின். கரண் ஜோஹர் படத்தை தயாரித்துள்ளார்.



இந்தப் படத்தில் கரீனா இம்ரான் ஜோடியைப் பார்த்த கரண் ஜோஹருக்கு டங்க் ஸ்லிப்பாகிவிட்டது. கரீனாவும் இம்ரான்கானும் கல்யாணம் செய்துகிட்டா நன்றாக இருக்கும் என்றாராம் ஓபனாக. இப்போதுதான் திருமணம் கரீனாவுக்கும் சைப் அலிகானுக்கும் ஆகியிருக்கிறது. இந்நிலையில் கரீனாவையும் இம்ரானையும் கோர்ப்பதா? என்று கரண் ஜோஹரிடம் கேட்டால் அதனால் என்ன இனியும் என்ன வேணும்னாலும் நடக்கலாம் என்று வெடி ஒன்றை வீசியிருக்கிறார். இதுபற்றி கரீனாவிடம் கேட்டால் கரண் அப்படியா சொன்னார்? அப்படீன்னா சைபின் கதி? என்று கேள்விக் குறியோடு முடித்திருக்கிறார். இந்தப் படத்தில் கரீனா நடிக்க காரணம் அவரது கதாபாத்திரம் கிராமத்து பெண் என்பதால்தானாம். படம் நவம்பர் 22ம் திகதி வெளியாகவுள்ளது.

## நயன்தாராவை சுற்றும் இளம் ஹீரோக்கள்



நயன்தாராவுடன் டூயட் பாடுவதற்கு ஆர்வமாக உள்ளார்களாம் கோலிவுட் கதாநாயகர்கள். இதுவரை முன்னணி கதாநாயகர்களுடன் மட்டுமே ஜோடி சேர்ந்து வந்த நயன்தாரா இப்போது இளம் நாயகர்களுடன் ஜோடி சேரத் துவங்கி விட்டார்.


இதுகுறித்து விசாரித்தால் சுவாரசியமான தகவல் தெரியவந்தது. கோலிவுட்டில் இப்போது மார்க்கெட்டில் உள்ள பல இளம் கதாநாயகர்கள் அனைவரும் நயன்தாராவுடன் ஜோடி சேர வேண்டும் என்றும் அவருடன் டூயட் பாட வேண்டும் என ஆசைப்படுகின்றனராம். இதனால் தங்கள் படங்களில் எப்படியாவது நயன்தாராவை புக் செய்யும்படி தயாரிப்பாளர்களை வற்புறுத்து கின்றனராம். இப்படியொரு தகவல் நயன்தாரவுக்கு எட்டியதும் சிறு புன்னகையுடன் ஜோடி சேர சம்மதம் தெரிவித்துள்ளாராம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமரைக்கிழங்குக் கறி

தேவையான பொருட்கள் : தாமரைக்கிழங்கு - 250கிராம், அப்பச்சோடா - 2 சிட்டிகை, மஞ்சள் தூள் - அரை தே.க, பம்பாய் வெங்காயம் - 1, உள்ளி - 2 பல்லு, தேங்காயெண்ணெய் - 5 மே.க, மிளகாய்த்தூள், மிளகுத்தூள், சோள மா - ஒவ்வொரு தே.க, உப்புத்தூள், ரேஸ்ற் மேக்கர் - அளவிற்கு, வெங்காயப்பூத்தண்டு - 10 , தக்காளி சோஸ் - 2 மே.க

செய்முறை : தாமரைக்கிழங்கைத் துப்பரவு செய்து கழுவி ஒரு அங்குல நீளமுள்ள சரிவான துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். வெங்காயப்பூத் தண்டை அளவான துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். பாத்திரத்தில் தாமரைக்கிழங்கை இட்டு அப்பச்சோடா, மஞ்சள் தூள், அளவிற்கு உப்பு என்பவற்றை இட்டு தண்ணீரை அளவிற்கு விட்டு நீர் வற்றும் வரை அவித்தெடுத்துக் கொள்ளவும். பம்பாய் வெங்காயத்தை வட்ட வடிவில் வெட்டி எடுக்கவும். உள்ளியைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். தாச்சியில் எண்ணெயை ஊற்றி கொதித்ததும் வெட்டிய வெங்காயம், உள்ளி என்பவற்றையிட்டு ஓரளவு வதங்கியவுடன் அவித்த கிழங்கை இட்டுக் கிளறி அதனுள் மிளகாய்த்தூள், சோள மா, என்பவற்றையிட்டு நன்கு சேர்த்துக் கொண்ட பின் வெங்காயப்பூ, தண்டையிட்டு சிறிது நேரம் மூடி அவியவிட்டு அளவிற்கு உப்பத்தூள், ரேஸ்ற்மேக்கர், தக்காளி சோஸ் என்பவற்றையிட்டுக் கலந்து கறி திரளத் தொடங்கியதும் இறக்கிக் கொள்ளவும்.





### கண்களுக்கான அழகுக் குறிப்புக்கள்:

♦ முகத்திற்கு பொலிவும், வசீகரமும் சேர்ப்பவை கண்கள். சிலருக்கு அந்த கண்களின் புருவத்தில் தேவையான அளவிற்கு முடி இருக்காது. இதற்கு சுத்தமான விளக்கெண்ணெயை கொஞ்சமாக எடுத்து புருவ முடிகளிலும், கண்முடிகளிலும் தேய்த்து வந்தால், முடி அடர்த்தியாக வளரும்.

♦ சோர்வான கண்களுக்கு, ரோஸ் வாட்டரில் நனைத்த காட்டன் பேட், வட்டமாக வெட்டிய வெள்ளரித் துண்டு போன்றவற்றை கண்களின் மேல் வைத்துக்கொள்ளலாம்.

♦ நன்றாகப் பொடியாக நறுக்கிய வெள்ளரித் துண்டுகளையோ அல்லது அதனுடன் கேரட் ஜூஸைக் கலந்தோ கண்களுக்கு அடியில் தடவி வந்தால். கரு வளையங்கள் மறையும்.

# மகளிர் முரசு

## பப்பாளியும் சருமப் பராமரிப்பும்

பப்பாளிப்பழம் உடல் நலனுக்கு மாத்திரமல்ல சரும பராமரிப்புக்கும் மிகவும் சிறந்ததாகும். வறண்ட தோலை அகற்றி புதிய தோலை உருவாக்குகிற வல்லமை பப்பாசிக்கு உண்டு.

பப்பாசிப் பழத்தை வெட்டி கூழாக்கிக் கொள்ளவும். அதன் ஒரு மேசைக்கரண்டி அளவினுள் முல்தானியம் மட்டி அரை தேக்கரண்டி அளவு இட்டு கலந்து பூசிவர முகத்தில் வறண்ட தோல் நீங்கி பளபளப்பான நிறம் கிடைக்கும்.

இக்கூழினை முகத்தில் மெதுவாகப் பூசி மசாஜ் செய்து பின்னர் மிதமான சுடுநீரில் கழுவினால் முகம் பளிச்சென்று தோற்றமளிக்கும்.

முகம் கரடுமுரடாக இருப்பவர்கள் பப்பாசித் தோலை ஒரு பாத்திரத்தில் இட்டு வேக வைத்து நன்றாக வெந்ததும் அதை அரைத்தெடுத்துக் கொள்ளவும். பின் அதனை 15 நிமிடங்கள் வரை முகத்தில் பூசி கழுவி வர முகத்தோல் மென்மையாக மாறும்.

கண்ணில் கருவளையம் இருப்பவர்கள் சோற்றுக்கற்றாழை இலையின் ஜெல்லுடன் பப்பாசிப் பழக் கூழினை கலந்து கழுத்தில் இருந்து மேல் நோக்கி முகம் முழுவதும், கண்ணின் கீழ்ப்பகுதி, மேல்ப் பகுதி உட்பட பூசி நன்றாகக் காய்ந்ததும் தண்ணீரில் கழுவி விடவும். இவ்வாறு வாரத்தில் இரண்டு நாட்கள் செய்து வர கண்ணின் கருவளையம் மட்டுமன்றி முகத்தில் காணப்படும் கருந்திட்டுக்களும் இல்லாது போய்விடும்.



**♦ பெண்களே உங்கள் முகம் பளிச்சென்று இருக்க வேண்டுமா........?**

இரவில் தூங்கும் போது தேங்காய் எண்ணெயை முகத்தில் பூசிக் கொண்டு தூங்கி காலையில் முகம் கழுவினால் பளிச்சென்று இருக்கும்.






**சுடுகலச் சமர் முற்றுமுழுதாக விலக்கப் பட்டிருந்ததால் வேறு விதமான தடங்கல் ஏதும் ஏற்பட்டுச் சண்டைகள் நடைபெற்றால் அதன் போது காயமடையும் அனைவரையும் எந்தெந்த வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற திட்டமும் தெளிவாகக் காட்டப் பட்டிருந்தது.**

அதன் படி அதற்கான பின்புல வாகன வசதிகளை அந்தந்த பிதேச வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு அவ் வைத்தியசாலையிலுள்ள நோயாளர் காவு வண்டிகளை பெற்றுக்கொண்டு உரிய இடத்திற்கு விரையும் வகையாக உள்ளூர்க் காவல்துறையினர் உசார்படுத்தப் பட்டிருக்க வேண்டும் என்பதும் தெளிவாக்கப்பட்டது.

தொடர்பாடலின் போது பயன்படுத்த வேண்டிய சங்கேதக் குறியாக அலிகவிற்கு "பறவை 1" என்பதும் டொடிக்கான சங்கேதக் குறியாக "பறவை 2" என்பதும் அவர்களைக் கைது செய்யும் அணிகளுக்கான சங்கேதக்குறியாக முறையே "கழுகு 1" மற்றும் "கழுகு 2" என்றும் பெயரிடப்பட்டிருந்தது.

தனது திட்டம் முழுவதையும் விளக்கிய பின்னர் மேலதிகக் கலந்துரையாடலுக்கான நேரத்தை உதவி அத்தியட்சகர் ஒதுக்கிக் கொடுத்தார்.

ஒரு சில சந்தேகங்கள் தீர்க்கப்பட்ட பின்னர் அணிகள் தமக்கான ஆயதங்களைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடாகியது. கைத்துப்பாக்கிகளே அத் திட்டத்திற்கான நேரடி ஆயுதமாக பயன்படுத்தப்பட்டன.

நேரம் இரவு 11 மணியைத் தாண்டிப் பத்து நிமிடங்கள் ஆகியிருந்தன. அந்தக் காவல்துறை அலுவலகத்திலிருந்து சில வாகனங்கள் மெதுவாக ஒன்றன் பின் ஒன்றாக வெளியேறி அமைதியாக தெருவில் பயணிக்கத் தொடங்கின.குறித்த சந்தியொன்றில் அவை தமக்குரிய திசைகளில் திரும்பி மீண்டும் பயணம்..... மூன்று ஜீப் வண்டிகள் ஒரு திசையாகவும், ஒரு ஜீப் வண்டியொன்றும் கார் வண்டியொன்றும் மற்றைய திசையாகவும்.......

அலிக வின் வீட்டை அண்மித்த பகுதியொன்றில் மூன்று ஜீப் வண்டிகளும் நிறுத்தப்பட்டன.

காவல்துறைப் பதாதைகள் இடப்படாத வண்டியில், நேரடி கைது நடவடிக்கையில் ஈடுபடப் போகும் எட்டுப் புலனாய்வாளர்களும் பயணிக்கத் தயாரானார்கள். எனினும் மற்றைய குழு தனது நிலையை அடைய வேண்டியுதம் கட்டுப்பாட்டு அறையிலிருந்து நடவடிக்கைக்குத் தலைமையேற்றுள்ள காவல்துறைப் புலனாய்வு அத்தியட்சகரிடமிருந்து கட்டளை வர வேண்டியதும் தான் எஞ்சியிருந்தன.

நேரம்..... பின்னிரவு 12 மணி 40 நிமிடம்.

கட்டுப்பாட்டு அலுவலகத் திலிருந்த பூகோள நிலை அறி முறைமை நுட்பத்தின் கண்காணிப் பிலிருந்த அலிக வின் தொலைபேசி இயங்கத் தொடங்கியிருந்தது. அச் செய்தியைப் பெற்றுக்கொண்ட உதவி அத்தியட்சகர் 'கழுகு1' றுடன் தொடர்பினை ஏற்படுத்தினார்.

"கழுகு 1.... கழுகு 1.... இது வேடன்.... இணைப்பிற்கு வரவும்....." இருமுறை அழைத்தபின் அத்தியட்சகரின் தொடர்பாடலில் "கழுகு 1" உயிர் பெற்றது.

"வேடன்...வேடன்... இது கழுகு 1... இணைப்பிலுள்ளேன்...."

" பறவை1 பறக்கின்றது.... பறவை1 பறக்கின்றது"

"புரிந்து கொண்டோம்.... ஆணைக்காக தொடர்பிலுள்ளோம்"

"அப்படியே..... கழுகு2... கழுகு2....இது வேடன் ..... இணைப்பிற்கு வரவும்" இரு முறை அத்தியட்சகரின் அழைப்பின் பின் உயிர் பெற்றது கழுகு 2.

"வேடன்...வேடன்.... இது கழுகு 2... தொடருங்கள்....."

"கழுகு2...உங்களது நிலை என்ன?"

"வேடன்.....இது கழுகு2 ..... காட்டிலுள்ளது...ஆணையின் பின் கூட்டுக்கு விரையும்"

இரண்டு அணிகளும் இருவரினதும் வீட்டிற்குக் கொஞ்ச தூரத்தில் நிலை கொண்டிருப்பதை அத்தியட்சகர் புரிந்து கொண்டார்.

ஜுன் மாதம் 6ம் திகதி அதிகாலை.... முழு நிலவு கவிய இன்னும் இரு நாட்களே இருப்பதால் அதிகாலையில் மெல்லிய வெளிச்சம் பரவத் தொடங்கியிருந்தது. நேரம் அதிகாலை 1 மணி 20 நிமிடம்.... வேடனிடமிருந்து கழுகுகளுக்குக் கட்டளை பறந்தது

" வேடன்...இது.... வேடன்... கழுகுகள் கூடுகளுக்குப் பறக்கலாம்" ... கட்டளை பறந்த அக்கணம்..... அலிக வின் வீடு நோக்கி அடையாளம் ஏதுமற்ற வெந்நிற ஜீப் வண்டியொன்று பெரும் இரைச்சல்கள் ஏதுமின்றிப் பயணிக்க ஆரம்பித்தது....

வாகனச் சாரதியை வீட்டிலிருந்து சில மீற்றர் தூரத்தில் நிறுத்திய புலனாய்வாளர்கள் மெதுவாக அலிகவின் வீட்டில் தாம் நிலையெடுக்க வேண்டிய புள்ளிகளை நோக்கி நகர்ந்தார்கள்.

ஆறு புலனாய்வாளர் களும் வீட்டின் முன்புறமாகத் தமது நிலைகளை எளிதாக எடுத்துக் கொண்டார்கள். ஆனால் பின் கதவில் நிலையொடுக்க வேண்டிய இரண்டு புலனாய்வாளர்களும் அருகிலுள்ள மரமொன்றின் ஊடாக ஏறியே மெதுவாக அலிக வின் வீட்டின் பின் கதவுத் தாள்வாரத்தில் இறங்க வேண்டியிருந்தது. சரசரப்புச் சத்தமின்றி மெதுவாக ஏறி இறங்குவதற்கு அவர்களுக்கு சிறிது நேரம் தேவைப்பட்டது .........

கழுகு1 தனது நிலைகளில் இருப்பதை வேடனுக்குத் தெரிவித்தது.

கழுகு2 டொடியின் வீட்டிற்க மிக அருகில் செல்லும் திட்டமெதனையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் அலிக கைது செய்யப்பட்டவுடன் அவனது தொலைபேசியிலிருந்து டொடியை அழைத்து இலகுவாகக் கைது செய்வதே திட்டமாக இருந்தது. அலிகவின் கைதில் ஏதாவது குளறுபடி நிகழ்ந்தால் மட்டுமே டொடியின் வீட்டினை நேரடியாக முற்றுகையிடும் திட்டமும் இருந்ததால் கழுகு2 போதுமான தூரத்தில் அடையாளமிடப்படாத கார் வண்டியினுள் ஐந்து பேரும் அதற்குச் சிறிது தூரத்தில் மூன்று பேரும், தாம் நிலையில் இருப்பதை வேடனுக்குத் தெரியப் படுத்தினர்.

வினாடி முட்களின் அசைவு அப்போதென்னவோ அப் புலனாய் வாளர்களுக்கு மிகத் தாமதமாக இருப்பதாகவும், அதிக அசூசையை ஏற்படுத்துவதாகவும் இருந்தது. உள்நுழையும் ஆறு பேரும் கைச்சுடுகலன்களைத் தயாராக்கிக் கொள்ள நேரம் சரியாக அதிகாலை 2 மணி என்பதைச் சுட்டியது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயநிர்ணய உரிமைக்கான மீள் வாக்கெடுப்பா வட மாகாண சபைத் தேர்தல்

இதயச்சந்திரன்
(நன்றி – vanakkamlondon.com)

தேர்தல் நெருங்கும் இவ்வேளையில், இரண்டு விடயங்கள் குறித்து ஊடகப்பரப்பில் அதிகமாகப் பேசப் படுவதைக் காண்கிறோம். ஒன்று, வேட்பாளர்கள் மீதான தாக்குதல்கள். இரண்டாவது, கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து தென்னிலங்கையில் எழும் விமர்சனங்கள்.

இதில் முதலாவது விடயத்தை நோக்கினால், பிரச்சாரக் கூட்டங்களுக்குத் தடை போடப்படுகிறது என்கிற பொதுவான குற்றச் சாட்டுக்களைவிட, வேட்பாளர் மீதான நேரடித்தாக்குதல்களும், வீட்டின் வாசலில் கழிவு எண்ணெய் அபிசேகம் செய்வதுமே முக்கிய அச்சுறுத்தலாகப் பார்க்கப் படுகிறது.

சூழலியலாளர் பொ.ஐங்கரநேசனின் காரியாலய வாசலிலும், இந்த எண்ணெய் அபிசேகம் நடந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும், தமிழீழ விடுதலைப்புலிகளின் திருக்கோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலனின் துணைவியார் அனந்தி அவர்கள், வாக்குச் சீட்டில் முதலாம் இடத்தில் (எண் 1) இருக்கின்றார். முதன்முதலாக இவர் மீதுதான் தாக்குதலும் நிகழ்த்தப்பட்டுள்ளது.

தேர்தல் பரப்புரையை முடித்து வீடு திரும்பும் வழியில், ஐந்து சந்தியில் வைத்து அனந்தி எழிலனின் மீது கல் வீச்சுத்தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது. வடக்கில் வசந்தம் வீசுகிறதோ இல்லையோ, கல் வீச்சு மட்டும் ஒழுங்காக நடைபெறுகிறது.

இவைதவிர, தேர்தல் மேடைகளில், சோறா..சுதந்திரமா?, அபிவிருத்தியா அதிகாரப்பகிர்வா? என்கிற பட்டிமன்றங்களுக்கும் குறைவில்லை.

இரண்டாவது விவகாரத்தை எடுத்துக் கொண்டால், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் பற்றியே , பௌத்த சிங்கள கடும்போக்குவாதிகளும், ஆளும் தரப்பினரும் அதிகமாகப் பேசுகின்றனர் என்கிற யதார்த்தம் புரியும்.

அண்மைக்காலமாக, 13 வது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும் என்று ஒரு சாராரும், இல்லை அறவே அதனை ஒழிக்க வேண்டுமென இன்னொரு தரப்பினரும், அறிக்கைபோரில் ஈடுபட்டதைக் காணலாம். ஒரு வழியாக அந்த விவாதமும், தேர்தல் நாள் அறிவிப்போடு அடங்கி விட்டது.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெறுவதற்கு முன்பாக, தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்கிற அழுத்தம் மேற்கிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் வந்ததால், தவிர்க்க முடியாமல் வடமாகாண சபைத்தேர்தலை வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசிற்கு ஏற்பட்டது. அப்படியொரு அழுத்தம் வரவில்லை என்பதைச் சிங்கள மக்களுக்குக் காட்டவே, ஏனைய இரண்டு மாகாணங்களில் தேவையற்ற தேர்தலை நடாத்துகின்றது அரசு. மாகாணசபை உருவாக்கத்திலும் இதுதான் நடந்தது. தமிழ் அரசியல் அமைப்புக்களாலும், பெரும்பாலான விடுதலைப்போராட்ட இயக்கங்களாலும் 13வது திருத்தச்சட்டம் நிராகரிப்பட்டாலும், வட- கிழக்கு இணைந்த மாகாணசபை முறைமையினை தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக இந்தியா முன்வைத்தது.

இந்தியாவின் அழுத்தத்தால், தமிழ் மக்களுக்கென்று தனியான தீர்வினை வழங்கி விட்டோமென்று சிங்கள தேசம் எண்ணி விடக்கூடாது என்பதற்காகவே , சகல மாகாணங்களிலும் சபைகளை உருவாக்கினார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. தென்னிலங்கை மக்கள் கேட்காத சபை அது.ஆனாலும் இன்னொருவகையில் பார்க்கும்போது, தமிழ் தேசிய இனம் என்பதை ஏற்றுக்கொள்ளாத, அத் தேசத்திற்கு (Nation ) இறைமை உண்டு என்பதை நிராகரிக்கும் அரசியலமைப்புச் சட்டத்தில், வட-கிழக்கிற்கு என்று தனியான சபைகளை உருவாக்க முடியாது என்பதால் எல்லா மாகாணங்களிலும் சபைகள் உருவாக்கப்பட்டது என்பதுதான் நிஜம்.

மாகாணசபைத் தேர்தலுக்காக, கூட்டமைப்பால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுதப்பட்ட எந்த விடயங்கள் குறித்துப் பேசுகின்றர்கள் என்று பாருங்கள்.

ஒஸ்லோ பிரகடன கதைகள் குறித்த விவாதத்தில் அவர்கள் ஈடுபடவில்லை. தேசத்தின் குரல் அன்டன் பாலசிங்கம் அவர்களுடன் இது பற்றிப் பேசிய பேராசிரியர் ஜி.எல்.பீரிசும் அதனை எப்போதோ மறந்து விட்டார்.

அடிப்படையில் உறுதியாக இருந்தவாறு, எதனையும் ஆலோசிப் பதற்கு தயார் என்பதே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாக அன்று இருந்தது. அதேவேளை, பிரபாகரன் அவர்களின் கொள்கையையே தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பின்பற்றுகிறது என்று எதனடிப்படையில், தேசப்பற்றுள்ள இயக்கத்தின் தலைவரும், அமைச்சருமாகிய விமல் வீரவன்ச கூறுகின்றார் என்பதைப் பார்க்க வேண்டும்.

நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கும் தேர்தல் விஞ்ஞாபனம் இதுவென்று கூறி, வழக்குப் போட முற்படும் சட்டத்தரணிகள் சங்கத்தின் நியாயப்பாடு, அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் எழுப்பப்படுகிறது. ஆனாலும் விஞ்ஞாபனத்திலுள்ள, சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய தேசம் என்கிற சொல்லாடல்கள், 83 இல் கொண்டுவரப்பட்ட 6வது திருத்தச்சட்டத்திற்கு முரணானது என்று விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் போர்க்கொடி தூக்குவார்கள். ஆங்கிலத்தில் nation (தேசம்) என்று இருந்தது, தமிழில் தேசியமாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அதை சிங்களத்தில் வாசித்த விமல் வீரவன்ச எப்படிப் புரிந்திருப்பாரென்று தெரியவில்லை. அது எவ்வாறு இருந்தாலும், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சொல்லையே அனைத்து லகம் உள்வாங்கிக் கொள்ளும்.

ஆனாலும், சுயநிர்ணய உரிமையைக் கோரிக்கையைக் கைவிடச் சொல்லும் அனைத்துலக நெருக்கடிக்கான குழு ( International Crisis Group) இதனை எவ்வாறு சகித்துக்கொள்ளும் என்கிற கேள்வியும் எழுகின்றது.

அதேவேளை, தாங்கள் குறிப்பிடுவது பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை அல்ல, உள்ளக சுயநிர்ணய உரிமை என்பது போன்ற புதிய விளக்கங்களும், கூட்டமைப்பு வட்டாரங்களில் இருந்து வருவதை கவனிக்க வேண்டும்.

6 வது திருத்தச் சட்டமானது, உள்ளக சுயநிர்ணய கோரிக்கையை அனுமதிக்குமா என்பதல்ல இங்கு பிரச்சினை. வட- கிழக்கில் வாழும் தமிழ் மக்கள், ஒரு இறைமையுள்ள பூர்வீக தேசிய இனம் என்பதை ஏற்றுகொள்ளாத அரசியலமைப்பில், உள்ளக உரிமைகளை எப்படி எதிர்பார்க்க முடியும்? என்பதே விவாதத்திற்குரிய முக்கிய விடயமாகும். தற்போதைய அரசியலமைப்பில் இதனை உள்வாங்கி மாற்றங்களைச் செய்யாமல், இரு தேசங்களின் பகிரப்பட்ட இறைமையின் அடிப்படையில், அதிகாரப் பகிர்வுப் பொறிமுறை ஒன்றினை நிறுவ முடியாது.

ஆகவே, தேர்தல் பிரகடனத்தில் குறிப்பிட்ட, ஒரு தேசத்தின் சுயநிர்ணய உரிமை என்கிற அடிப்படைப் பிறப்புரிமையை , சிங்களத்திற்கு ஏற்றவாறோ அல்லது சில சர்வதேச நாடுகளுக்கு ஏற்றவாறோ மாற்றியமைக்காமல், அடுத்த கட்ட அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள இந்த விவகாரத்தை வைத்து, வடமாகாண சபையைக் கலைக்க, வட- கிழக்கைப் பிரித்த ஜே.வி.பியே , உயர்நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யலாம் (தற்போது அதனை கலாநிதி.குணதாச அமரசேகர முன்னெடுக்கின்றார் ).

ஒற்றையாட்சி மற்றும் சிங்கள தேசத்தின் முழுமையான நாட்டிறைமை என்கிற மேலாதிக்க கருத்துருவத்திற்கு அச்சுறுத்தல் எந்த வடிவத்திலும் வந்தாலும், அதனை பெரும்பான்மை இனத்தின் அனைத்து கட்சிகளும் சேர்ந்தே எதிர்க்கும் என்பதுதான் இலங்கையின் வரலாறு.

ஆதலால் இதனைக் கருத்தில் கொண்டு, இது போன்ற தேர்தல்கால எழுச்சி, நிலஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டங்களிலும் உருவாக்கப்பட வேண்டும். ஏனெனில், 13வது திருத்தச்சட்டத்தில் உள்ள சிறிய அதிகாரங்களைக்கூட மாகாணசபைக்கு அரசு வழங்காது. வரதராஜப் பெருமாளின் வரலாற்று அனுபவங்கள், நிகழ்கால அரசியல் தளத்தில் திரும்பவும் வரப்போகிறது.

இந்தியாவின் பூரண ஆதரவோடு, பக்கபலத்தோடு, இணைந்த வட- கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராகவிருந்த வரதரால், ஈழப்பிரகடனத்தை மட்டுமே செய்ய முடிந்தது.பின்னர், கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட ஆயுத இயக்கமே ( கூட்டமைப்பின் மொழியில் ), அந்த அடிப்படை பிறப்புரிமையை 2009 வரை கொண்டு சென்றது என்கிற உண்மையை மறக்க முடியாது.

## -நூலாசிரியனின் இறப்பு-
### பன்முகச் சிதறலை நோக்கி

ஆதிகாலந் தொட்டு இலக்கியங்கள் படைத்தலும் நயத்தலும் இன்றுவரை இலக்கிய உலகில் ஒரு இயங்கியலாக இருந்து வருகின்றது. சங்கத்தின் எட்டுத்தொகை பத்துப்பாட்டிலிருந்து இன்றைய நவீன இலக்கியங்கள் வரை அச்செயற்பாட்டின் தொடர்ச்சியை நாம் கண்டு தான் வருகின்றோம்.

படைப்புக்கள், படைப்பாளிகள் எனும் இரு கருத்துநிலைகளின் மத்தியில் புரிந்து கொள்ளக் கூடிய விடயங்கள் மிகவும் சுவாரசிய மானவையும் கூட. சமூகம்சார் விடயத் தெளிவுகள், ஆழ் மனதின் எண்ண ஓட்டங்கள், வாழ்க்கைப் பாதையிடத்து அனுபவித்த வலிகள், அவஸ்தைகள், அனுபவ ரேகைகளை தான் மட்டுமே அறிந்திராமல் அவற்றை வாசகனுக்கும் எடுத்துச் சென்று எண்ண ஓட்டங்களை விரிவு படுத்தும் ஒரு செயற்பாட்டை எழுத்தாளன் மேற்கொண்டு வருகின்றான்.

தானே அனுபவித்த வேதனைகளின் துன்பியலாகட்டும் இன்பத்தின் நொடிகளாகட்டும் அவற்றை மனக்கிடங்கில் பூட்டி வைக்க முடியாத வெடிப்புக்களாக வெளிக்கிளம்புபவையே படைப்புக்கள்.

இந்த இருபத்தொராம் நூற்றாண்டின் பயணத்தில் எத்தனையோ புதிய முகங்களின் முகவரிகளை எம்மைத் தேட வைத்தது அவர்களது படைப்புக்களே. ஊலகின் ஏதோ ஒரு மூலையில் வசித்துக் கொண்டிருக்கும் சேர்'னையாகட்டும் நெல்லிமரப் பள்ளிக்கூடம் தந்த. நந்தினி சேவியரையாகட்டும் புதுப்புது விமர்சன விளக்கம் படைக்கும் பேராசிரியர் யோகராசாவையாகட்டும் உலகம் திரும்பிப் பார்க்க வைத்தது அவர்களது படைப்புக்களே என்னும் கருத்துக்கு வேறு கருத்திருக்க நியாயமில்லை. இது போலவே தான் எமது தமிழ் இலக்கிய வரலாற்றின் பாதையும் பல படைப்புக்களால் படைப்பாசிரியன் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளான். தோடர்காலப் பயணத்திற்கும் அழைத்துவரப்படுகின்றான் எனலாம்.

எனினும் எழுத்து மொழி என்பது எவ்வளவு தூரம் எழுதுபவனின் மனதில் இருந்து வெளிவருகிறது என்பது குறித்து சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம். மனவோட்டத்தில் அரும்பும் எண்ணங்களுக்கு வரிவடிவம் கொடுக்கும் போது யாரோ உருவாக்கியதொரு குறியீட்டு வடிவில் அது நிலைமாறி அமர்ந்து விடுகின்ற சிந்தனை எழுத்தாளனுக்கு உருவாகுமெனில் எழுத்தின் பௌதீகத் தன்மை அல்லது தொழில்நுட்ப பண்பு எழுதியவரின் உள்ளத்தை வெளிப்படுத்துவதற்கு தடையாக உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும். உதாரணமாக ஒரு பெண் படைப்பாளி தன் எண்ணவோட்டங்களை வெளிப்படையாகச் சொல்லிவிட முடியாத நிலையில் இருப்பதை ஏற்றுக் கொள்ளவே வேண்டும். ஏனெனில் சமூகத்துக்குப் 'பயனற்று... என்கின்ற நிலை இயல்பாக எழுத்தாளனது மனதுக்குள் குடிகொண்டு விடுகின்றது. பொதுவாக இது எழுத்தாளனின் இலக்கினை அடைய முடியாத. அவனின் நோக்கத்தை அடைய முடியாத தடையாக அது அமைந்து மொழி வழியாக தன் உள்ளத்தை வெளிப்படுத்தாத தோல்வியில் முடிவதாக அமையும். அது போலவே தான் ஓர் எழுத்தாக்கம் சூழலை உள்வாங்கி எழுத்தாளனால் படைக்கப்படுகின்றது. அப்படைப்பே வேறொரு சூழலில் வாசிக்கப்படப்படும் போது அதனுடைய படைப்பின் தன்மை, வெளிப்படுத்தும் கருத்து என்பன வெவ்வேறாக விளங்கிக் கொள்ளப்படக் கூடிய சாத்தியம் உண்டாகின்றது. எந்தவொரு படைப்பாளியும் தன் படைப்புக்களுடாகச் சொல்ல விளையும் விடயத்தை அவன் எதிர்பார்க்கும் அடைவை வாசகன் பெற்றுக் கொள்கின்றானா என்பது வினாவே...?

ஏனெனில் மொழியிலிருந்து உருவாக்கப்படும் நூலியமும் குறிப்பிட்ட பொருளை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக தன்னை அழிவுக்கு உட்படுத்திக் கொள்ளும் அதே வேளை வாசகர் தமக்குரிய அர்த்தங்களை உருவாக்கிக் கொள்வதற்கு மொழி தன்னைத் தானே சிதறடித்தக் கொள்ளும் இயல்பு வாய்ப்பளிக்கிறது. வாசகனது சுதந்திரமான உளச் செயற்பாட்டை உள்வாங்கிக் கொள்வதற்குரிய இடைவெளிகள் அல்லது வெற்றிடங்கள் மொழியிலே காணப்படுவதால் இச் செயற்பாடு நூலாசிரியனின் இறப்பு ஆகாதா? என்றே எண்ணத் தோன்றுகின்றது. படைப்பாக்கத்தின் பின் அப்படைப்பு வாசகனின் கரங்களைச் சென்றடைந்து விடுகிறது. பின்னர் அதன் பெறுமானங்கள் வெவ்வேறு வகையில் அமைந்து விடுவது சிந்திக்கத்தக்கது.

ச.கோபிரமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூறு சொகுசு வாகனங்கள் பொது நலவாய மாநாட்டிற்கு

பொது நலவாய மாநாட்டிற்குத் தோவையான வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு தேவையான சுமார் 1.2 மில்லியன் ரூபாய்களுக்கு அதாவது, 7.8 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவிட அரசு தயாராகிவிட்டது. இக்கொள்வனவினுள் 40 சொகுசு ஏஆறு வாகனங்களும் 60 அதிசொகுசு ஜீப் வாகனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவற்றுள் இந்த 60 ஜீப் வண்டிகளும் பாதுகாப்பிற்கு பயன்னடுத்த இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டத்தொடரின் முடிவின் பின் இவ்வாகனங்கள் பொது ஏலத்திலேயே விற்கப்படும் எனவும், அவ்விற்பனையில் இருந்து செலவினை மீளப்பொறும் திட்டம் இருப்பதாக தெரிகிறது. கார் ஒன்றின் விலை 793 மில்லியனாகவும் ஜீப் ஒன்றின் விலை 238 மிவ்வியனாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏஆறு வாகனங்களை தமது பாவனைக்கு

# the SUNDAY TIMES

தருமாறு ஏற்கனவே அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## தொலைபேசி கதைத்துக் கொண்டு குறுக்கறுத்தால் தண்டம்

தொலைபேசியில் கதைத்துக்கொண்டு தெருவைக் கடக்க முனையும் பயணிகளுக்கு தண்டத்தினை விதிப்பதற்கு அரசு தயாராகி வருகிறது.

## நூற்றுக்கணக்கான கண்காணிப் பாளர்கள் வடக்குத் தேர்தலில்

1987ம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட 13வது திருத்தச் சட்டப்படியான முதலாவது மாகாணசபைத் தேர்தல் வடக்கில் நடைபெறவுள்ளது. அதனைக் கணிகாணிப்பதற்காக நூற்றுக்கணக்கான தேர்தல் கண்காணிப்பாளர்கள் வடக்கில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளனர். வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கான யாழ்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் தேர்தல் நடைபெற உள்ளன. வடக்கில் ஒரு நீதியான தேர்தலை நடத்தவேண்டும் என வடக்கின் முக்கி கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருப்பது குறிப்பிடத் தக்கது..

## ஹலாலுக்கு எதிராக மீண்டும் போராட்டங்களைத் தொடருவோம். — பொ. ப.சே

கலாலுக்கு எதிராக மீண்டும் போராட்டங்களை சடத்த உள்ளதாக பொது பல சேனா எச்சரித்துள்ளது. நாம் கலால் சான்றிதளுக்கு எதிராக மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கையினை அரசின் வேண்டு கோளை ஏற்று கைவிட்டு இருந்தோம். அரசு எமக்கு இவ்விடத்தை ஆராய்வதற்காக பாராளுமன்றத் தேர்வுக் குழு ஒன்றை உருவாக்குவதாக உறுதி அளித்திருந்தது. ஆனால் தற்போது வரை அதனை அரசு நிறைவேற்ற வில்லை அதனால் மீண்டும் எமது போராட்டத்தை தொடர வேண்டும் போல் இருப்பதாக பொது பல சேன செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

### றஞ்சனி — இப்போதும் தேசத்திற்கு ஆபத்தே — ஆஸி

தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னால் சிறுவர் பொராளியும் தற்போது ஆஸியில் திருமணம் முடித்துள்ள வருமான றஞ்சின் தமது நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்தானவர் என்றே தாம் கதுவதாக ஆஸி யின் பாதுகாப்புப் புலனாய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

றஞ்சினி தற்போதும் வேலுப்பிள்ளை பிரபாகரனை தலைவராகவே ஏற்றுக்கொண்டுள்ளார் என அவ்வமைப்பு கருதுகின்றது. அதனாலேயே அவரை வேலியிடப்பட்ட வீடொன்றில் தன்னியக்க கண்காணிப்பு முறையின் கீழ் தடுத்து வைத்தள்ளதாக ஆஸி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# SUNDAY OBSERVER

SriLanka's English Newspaper with the largest circulation

## 5000 கண்காணிப்பாளர்கள்

மூன்று மாகாண சபைகளிலும் நடைபெறவுள்ள தேர்தல்களைக் கண்காணிக்கவென 5000 கண்காணிப பாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

அவர்களுள் 4800 பேர் உள்நாட்டுக் கண்காணிப்பாளர்களாக பெளரல் அமைப்பில் நியமனம் பெறுகின்றனர். அதற்கு மேலதிகமாக அவ்விமைப்பில் இணைந்த தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் அமைப்பின் அங்கத்தவர்களும் ஈடுபடுகின்றனர்.

காலை 7.00 மணிக்கு ஆரம்பிக்கும் வாக்களிப்பு மாலை 4.00க்கு முடிவடைவதுடன் சுமார் 832 தேர்தல் நிலையங்களில் தேர்தல் நடைபெறும்

## வாசுதேவ மறுப்பு

வடக்கின் தேர்தல் விடயங்களில் படையினர் ஈடுபடுகின்றார்கள் என்ற தமிழ்தேசிய கூட்டமைப்பின் குற்றச்சாட்டை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மறுத்துள்ளார்.

யாழ்பாணத்தில் உள்ள தான் அவ்வாறான நடவடிக்கைகள் எதனையும் தற்போது வரை காணவில்லை எனத் தெரிவித்த அமைச்சர், தேவையற்ற விதமாக படையினர் யாழ்பாணத்தில் எப்பிரதேசதிலும் காணப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

## தரமற்ற மருந்துகளுக்குத் தண்டம் கடுமை

தரமற்ற மருந்துப் பொருட்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய முனையும் மருந்துப் பொருள் வினியோகத்தர்களுக்கு கடும் தண்டம் விதிக்கப்படவுள்ளது.

அதன்படி இறக்குமதிக்காக அவர்களுக்கு செலுத்தப்பட்ட பெறுமதியுடன் மேலும் 25 வீதத் தண்டத்தை அவர்கள் செலுத்த வேண்டியேற்படும்.

இப்போது அனைவரும் மிகவும் கண்ணுங் கருத்துமாக இருப்பதால் தரங்குறைந்த மருந்துப் பொருள் வினியோகிக்கப்படுமானால் உடனடியாக அம்மருந்துப் பொருளை பரீட்சித்துப் பார்க்கவும் அவ்வாறு தரம் குறைந்திருக்குமானால் உடடினயாக அப் பொருளைச் சந்தையியலிருந்தும் பயன்பாட்டிலிருந்தும் விலக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மேற்சொன்ன தண்டப்பண அறவீட்டையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிகின்றது.

## எதிர்கட்சியால் எதுவும் செய்ய முடியாது

எமது நாட்டின் எதிர் கட்சியால் ஆளுங்கட்சியை நோக்கி எவ்வித நடவடிக்கையையும் எடுக்க முடியாதிருப்பதாக வயம்ப மாகாண சபை வேட்பாளர் தெரிவித்துள்ளார்.

## எதிர்கட்சியால் எதுவும் செய்ய முடியாது

பொது நலவாய மாநாட்டின் ஊடாகப் பெருமளவு வெளிநாட்டு முதலீடுகளைத் திரட்டிக்கொள்ள முடியும் என பிரதமா தெரிவித்துள்ளார்.

அத்துடன் உலக நாடுகளுக்கு ஸ்ரீலங்கா எவ்விதம் தனது சமுகங்களை பராமரிக்கின்றது என்பதைனையும் இம் மாநாட்டின் ஊடாக வெளிக் காட்ட முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்க தனியே நாம் பொதுநலவாய நாடுகளை மட்டும் முதலீட்டுக்காக அழைக்கவில்லை. மாறாக எந்தெந்த நாடுகள் முதலிடத் தயாராக உள்ளனவோ அந்த நாடுகள் அனைத்தையும் இங்கு அழைத்துள்ளோம் என அவர் தெரிவித்தார். சீனத்தலைவர்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள நாம் அவர்களிடமிருந்த பெருந் தனவந்தர்களை இலங்கையில் மதலிட அழைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளோம் என்றும் தெரிவத்தார்.

# The Sunday LEADER

## தேர்தல் ஆணையாளர் கடும்பிடியில்

தமது சொத்து விபரங்களைச் சமர்ப்பிக்காத எந்த ஒரு கட்சியினதுமோ அல்லது தனிப்பட்ட வேட்பாளரினதுமோ விருப்ப வாக்குகளை வர்த்தமானியிடப் போவதில்லை என தேர்தல் ஆணயைர் முடிவெடுத்துள்ளார்.

ஏற்றக்கொள்ளப்பட்ட அனைத்துக் கட்சிகளும் தமது சொத்து விபரங்களை வெளியிடக் கடைசி நாளாக செம்டெம்பர் 21ம் திகதியைக் குறித்துள்ளார் ஆணையர். பெரும்பாலும் சிறிய அரசியில் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களுமே தமது சொத்து விபரங்களைத் தற்போது வரை சமர்ப்பிக்கவில்லை என தேர்தல்கள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வடக்கில் இராணுவத்தையும் முகாம்களையும் அதிகரிக்க வேண்டும்

வடக்கில் தேர்தலை முன்னிட்டு இராணுவத்தின் எண்ணிக்கையையும் அவர்களுக்கான முகாம்களின் எண்ணிக்கையையும் பெருமளவில் அதிகரிக்க வேண்டும் என்றே விரும்புவேன் என யாழ் கட்டளைத் தளபதி தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் நடவடிக்கைகளில் தற்போதுவரை மக்களுடன் ஒளிந்து வாழும் சுமார் 4000 புலிகளும் ஈடுபடவதாலேயே இத் தேவை எழுந்துள்ளது என பத்திரிகையின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக பிரபாகரன் ஒரு சிறந்த தலைவர் என்றும் அவர் விட்ட இடத்திலிருந்து தாம் தொடரப் போவதாகவும் விக்னேஸ்வரன் தெரிவித்துவருவதாக தான் கேள்விப்படுவதாக அவர் தெரிவித்தார்.

## அரச தொலைக்காட்சிக்கு வருமதியாகவுள்ள 120 மில்லியன்

இலங்கை ரூபவாகினிக் கூட்டுத் தாபனத்திற்கு வருமதியாகவுள்ள சுமார் 120 மில்லியன் ரூபாய்களைத் திரட்டிக் கொள்ள அர்ரோனி ஜெனரலின் ஆரோசனையை அக் கூட்டுத்தாபனம் நாடியுள்ளது.

பெரும்பாலும் அரசியில் வாதிகளும், அரச திணைக்களங்களும் செலுத்தவேண்டியுள்ள இத்தொகை யினைத் திரட்டிக் கொள்ள முடியாத நிலையில் கூட்டுத்தாபனம் உள்ளது.

இவ்வாலோசனையை அடுத்து சட்ட நடவடிக்கையை அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

42 மில்லியன் ரூபாய்களை அரசியல்வாதிகளும், 56 மில்லியன் ரூபாய்களை அரச திணைக்களங்களும் செலுத்தவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெரும் பாதுகாப்பு ஒத்திகை

பொதுநலவாய மாநாட்டின் பாதுகாப்பை வழங்கவது தொடர்பான மாபெரும் ஒத்திகையொன்றைப் பாதுகாப்புப் படைகள் மேற்கொள்ளவுள்ளன.

## நிதி அமைச்சர்களை சந்திக்கும் ஜி.எல்

பொதுநலவாய மாநாட்டில் பங்பற்றவுள்ள நாடுகளின் நிதி அமைச்சர்களை அமைச்சர் ஜி.எல் பீரிஸ் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பை இம்மாதக் கடைசியில் நியூயோர்க் நகரத்தில் அவர் மேற்கொள்வார்.

## கே.பி அரசியலில் இல்லை

அரசியலில் ஈடுபடும் எண்ணம் தனக்கு எப்போதுமே இல்லை என்று விடுதலைப் புலிகளின் முன்னால் ஆயுதக் கொள்வனவாளர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 06

பகுதி 01.

01. குருதிக்கலன்களில் குருதி உறையாத போதிலும் குருதிக்கலன் தகர்வுறும் போது குருதி உறைகின்றது. பின்வரும் எக்கூற்று இந்த அவதானிப்பை விளக்குகின்றது.
    அ. உடலிலிருந்து குருதி வெளியே வரும் போது மாத்திரம் குருதி உறைதல் நடைபெறுகின்றது.
    ஆ. குருதிக்கலன் தகர்வுறும் போது மாத்திரம் சிறு தட்டுகள் செயற்பட்டு குருதியுறைதல் நடைபெறுகின்றது.
    இ. குருதிச் சிறுதட்டுகள் கட்டிபோல் சேர்ந்து அதனைச் சுற்றி மற்றைய கலன்கள் படிவதன் மூலம் குருதியுறைதல் நடைபெறுகின்றது.
    ஈ. குருதிக்கலன்கள் உயிர்க்கலன்கள் ஆகையால் உடலில் உறையாத போதிலும் வெளியில் உயிரற்று இருப்பதனால் உறைதல் நடைபெறுகின்றது.

02. ஒடுக்கற்பிரிவு பின்வரும் எந்நிலைமையில் ஏற்படும்?
    1. நுகம் முளையமாக மாறும் போது
    2. முளையம் முதிர்மூலவுருவாக மாறும் போது
    3. எல்லா உடற் கலங்களும் வளரும் போது
    4. சூல்களினதும் விந்துகளினதும் உற்பத்தியின் போது

03. தெறி வில்லின் கணத்தாக்கங்கள் செல்லும் சரியான பாதை யாது?
    1. இயக்கு நரம்புக்கலம் $\rightarrow$ புலன் நரம்புக்கலம் விளைவு காட்டும் அங்கம்
    2. இயக்கு நரம்புக்கலம் முண்ணான் புலன் அங்கம்
    3. புலன் நரம்புக்கலம் முண்ணான் இயக்க நரம்புக்கலம்
    4. வாங்கி அங்கம் இயக்கு நரம்புக்கலம் புலன் நரம்புக்கலம்

04. உப்பளத்தில் உப்பு உற்பத்திச் செயன்முறையில் கல்சியம் காபனேற்று, கல்சியம் சல்பேற்று, சோடியங் குளோரைட்டு கீழ்ப்படிவாதல் முறையே நடைபெறுகின்றது. இவ்வுப்புகளின் கரைதிறன் பற்றிய சரியான தொடர்பு யாது?
    1.
    2. $NaCl\langle CaCO_3\langle CaSO_4$
    3. $CaSO_4\langle NaCl\langle CaCO_3$
    4. $CaCO_3\langle NaCl\langle CaSO_4$

05. ஒரு முவ்வலுவளவு உலோகம் $M$ ஆனது ஓர் இருவலுவளவு அல்லுலோகம் உடன் சேர்ந்து உண்டாக்கும் சேர்வையின் சூத்திரம் யாது?
    1. 2. $M_2X_3$ 3. $MX_3$ 4. $M_2X$

06. குளோரீன் $^{37}_{17}Cl$ சமதானி அணுவில் உள்ள புரோத்தன்கள், நியூத்திரன்கள், இலத்திரன்கள் ஆகியவற்றின் எண்ணிக்கைகள் முறையே
    1. 17, 17, 20 ஆகும் 2. 17, 20, 17 ஆகும்
    3. 20, 17, 17 ஆகும் 4. 17, 17, 17 ஆகும்.

07. ஓசோன் படை வறிதாக்கத்திற்கு (சிதைவடைதலுக்கு) உயர்ந்த பட்சம் பின்வரும் எக்கூறு பங்களிப்புச் செய்கின்றது?
    1. அமோனியா $(NH_3)$ 2. காபனீரொட்சைட்டு $(CO_2)$
    3. குளோரபோம் $(CHCl_3)$ 4. மெதேன் $(CH_4)$

08. இலங்கையை அண்டிய கடல் தளத்தில் வாயு எரிபொருள் படிவு இருப்பதாக அறிவிக்கப்பட்டது. அப்படிவில் பிரதான கூறாக இருப்பதற்கு அதிக வாய்ப்பு உள்ள வாயு பின்வருவனவற்றுள் எது?
    1. நைதரசன் 2. நேயன் 3. மெதேன் 4. கந்தகவீரொட்சைட்டு

09. காரீயம், வைரம் ஆகிய காபன்கள்
    1. சமதானிகளாகும் 2. பிறதிருப்ப வடிவங்களாகும்
    3. சேர்வைகளாகும் 4. வேறுபட்ட பௌதீக நிலைகளாகும்

10. நிலை மின்னேற்றங்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
    அ. பெற்றோல் பவுசர்களில் நிலைமின்னேற்றங்கள் திரள்வதைத் தடுப்பதற்குப் பவுசர்கள் உலோகச் சங்கிலியினால் புவியுடன் தொடுக்கப்பட்டிருக்கும்.
    ஆ. நீர் மின்னை உற்பத்தி செய்யும் போது நீரில் உள்ள நிலை மின்னேற்றங்கள் தைனமோவினால் ஓட்டமின்னாக மாற்றப்படும்.
    இ. மின்னலின் போது முகிலில் உள்ள நிலைமின்னேற்றங்கள் புவியுடன் அல்லது வேறொரு முகிலுடன் மின்னிறக்கத்தை உண்டாக்கும்.

மேற்குறித்த கூற்றுக்களில் உண்மையானவை எவை?
    1. அ, ஆ ஆகியன 2. அ, இ ஆகியன
    3. ஆ, இ ஆகியன 4. அ, ஆ, இ ஆகியன.

### பாடம் - கணிதம், 06

பகுதி 01.

01. 2, 7, 5, 8, 5 என்னும் தரவுக் கூட்டத்தின் ஆகாரம் யாது?

02. சுருக்குக. $\frac{2}{x}-\frac{1}{x+1}$

03. கொழும்பு பிரதான பேரூந்து நிலையத்திலிருந்து கண்டிக்கு 10 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் காலிக்கு 20 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் அநுராதபுரத்திற்கு 35 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் பேரூந்துகள் புறப்படுகின்றன. அதிலிருந்து நண்பகல் 12.00 இற்கு இம்மூன்று நகரங்களுக்கும் ஒரே தடவையில் மூன்று பேரூந்துகள் புறப்பட்ட ஒரு நாளில் அடுத்ததாக அந்நகரங்களுக்கு ஒரே தடவையில் மூன்று பேரூந்துகள் எவ்வளவு நேரத்திற்குப் பின்னர் புறப்படும்?

04. ஒருவர் புள்ளி யிலிருந்து கிழக்கு நோக்கிச் சென்று புள்ளி யிற்கு வருகிறார். அவ்விடத்திலிருந்து தெற்கு நோக்கிச் சென்று புள்ளி $C$ யிற்கு வருகிறார். $A$ யிலிருந்து இன் திசைகோள் யாது?

05. $A$, என்பன ஒன்றிலிருந்தொன்று தூரத்தில் இருக்கும் இரு புள்ளிகளாகும். கேத்திர கணித அறிவைப் பயன்படுத்தி
    அ. $A$ யிலிருந்தும் யிலிருந்தும் சமதூரத்தில் இயங்குகின்ற ஒரு புள்ளியின் ஒழுக்கையும்
    ஆ. அவ்வொழுக்கின் மீது புள்ளி யிலிருந்து தூரத்தில் உள்ள $P,Q$ என்னும் இரு புள்ளிகளினதும் அமைவுகளையும் பெறும் விதத்தை உரிய அளவீடுகளுடன் ஒரு பரும்படிப்படத்தில் காட்டுக.

06. 80 கிலோமீற்றர் / மணித்தியாலம் என்னும் கதியில் செல்லும் பேரூந்து ஒன்று 2 மணித்தியாலத்தில் செல்லும் தூரம் எவ்வளவு?

07. $x$ ஒரு நிறைவெண்ணின், சமனிலி ஐத் திருப்தியாக்கும் $x$ இன் இரு பெறுமானங்களை எழுதுக.

08. 1.5 நிறையுள்ள ஒரு வெற்றுப் பெட்டியினுள்ளே சம நிறையுள்ள 5 புத்தகங்கள் அடுக்கப்பட்டுள்ளன. புத்தகங்கள் உள்ள பெட்டியின் மொத்த நிறை $5.25\,Kg$ எனின், ஒரு புத்தகத்தின் நிறை யாது?

09. அடி ஒரு சதுரமாக உள்ள ஒரு திண்மச் செங்கூம்பகம் காணப்படுகின்றது. சதுர அடியின் ஒரு பக்கத்தின் நீளம் $a$ அலகுகள் எனவும், ஒரு முக்கோண முகத்தின் உச்சியிலிருந்து எதிர்ப்பக்கத்திற்கு உள்ள செங்குத்துத் தூரம் $CaSO_4\langle NaCl$ அலகுகள் எனவும் கொண்டு கூம்பகத்தின் மொத்த மேற்பரப்பின் பரப்பளவை , ஆகியவற்றின் சார்பில் பெறுக.

10. ஒரு குறித்த கம்பெனியில் ரூ7200 ஐ துமலீடு செய்து பெயர் மாத்திரையான பெறுமானம் ரூ 8000 ஆன ரூ 10 பங்குகளைக் கொள்வனவு செய்யலாம். ஒரு பங்கின் சந்தைப் பெறுமானம் யாது?

11. ஒரு குறித்த வேலையை 4 மனிதர்கள் 5 நாட்களில் செய்து முடிப்பர். அதனைப் போன்ற இரு மடங்கான வேலையை 4 நாட்களில் செய்து முடிப்பதற்கு எத்தனை மனிதர்கள் தேவை?

12. , $(x+2)(x+3)$ எனும் இரு அட்சரகணித கோவைகளின் பொது மடங்குகளுட் சிறியது $(x+1)(x+2)(x+3)$ ஆகும். அவ்விரு அட்சரகணிதக் கோவைகளினதும் பொதுக் காரணி யாது?

13. ஒரு மாதத்திற்கு 18% ஆன கூட்டு வட்டிக்கு ரூ 5000 ஐக் கடனாகப் பெற்ற ஒருவர் இரண்டாம் மாதத்தில் கொடுக்க வேண்டிய வட்டி, முதல் மாதத்தில் கொடுக்க வேண்டிய வட்டியிலும் பார்க்க எவ்வளவினால் கூடியது?

14. முதல் உறுப்பு 8 ஆகவும், பொது விகிதம் 2 ஆகவும் உள்ள ஒரு பெருக்கல் விருத்தியின் 25 ஆம் உறுப்பை 2 இன் வலுவாகக் காட்டுக.

15. சூத்திரம் $2hR-h^2=a^2$ இல் $R$ ஐ எழுவாயாக்குக.

பகுதி 02.

01. ஆண்டின் தொடக்கத்தில் மோகன் ரூ 8000 தை இட்டு ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தார். அதற்கு மூன்று மாதங்களின் பின்னர் முகுந்தனும் அதிலிருந்து மேலும் மூன்று மாதங்களின் பின்னர் சங்கரும் ரூ 8000 வீதம் இட்டு வியாபாரத்தில் இணைந்தனர். ஆண்டின் இறுதியில் வியாபாரத்திலிருந்து ரூ 7200 இலாபம் கிடைத்தது.

அ. சமமாகப் பணம் இடப்பட்டிருக்கின்றமையால் இலாபமும் மூவருக்குமிடையே சமமாகப் பிரிக்கப்பட வேண்டும் என்பது சங்கரின் கருத்தாக இருந்தது. இக்கருத்து நியாயமானதன்று என்பதற்கு காரணங்களை எழுதுக.

ஆ. மூவருக்குமிடையே இலாபம் பிரிக்கப்பட வேண்டிய விகிதத்தை கண்டு அதனை மிக எளிய வடிவத்தில் எடுத்துரைக்க.

இ. இதற்கேற்ப மோகனுக்குக் கிடைக்கும் இலாபத்தைக் கண்டு அதனை அவர் இட்ட பணத்தின் சதவீதமாகக் காட்டுக.

கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர்

குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புளியன்குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

*பயிற்சி 7* *பாடம் - வரலாறு*

பகுதி – II

(02)

(அ) இலங்கையில் பின்வரும் குடியேற்றங்கள் நிறுவப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்குகளை A, B, C ஒழுங்கில் தருக?

A அநுராதகம B உருவெலகம C தீகவாபி

(ஆ) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களை A, B, C, D ஒழுங்கில் தருக

A மிகப் பெரிய தூபியான ஜேத்தவனாராமயவை அமைத்தல்
B வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழ்ந்த ஆரியர் குழுக்களை ஒன்றிணைந்து இராசதானி உருவாக்கல்
C முதன் முதலில் பௌத்த சமயத்தை பின்பற்றல்
D மகாமேகவன பூங்காவை அமைத்தல்

(இ) இலங்கையில் பௌத்த சமயம் பரவ பங்களித்த காரணிகள் இரண்டை சுருக்கமாக விளங்குக.

(ஈ) பௌத்த சமயம் பரவியதால் ஏற்பட்ட மாற்றங்களை பின்வரும் தலைப்பில் விளங்குக.

1. சமூகம் 2. கல்வி

(03)

(அ) இலங்கையில் நீர்வளநாகரிக காலத்தில் சிறந்த அரசியல்,பொருளாதார கட்டமைப்பை காணலாம். பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களைத் தருக.

A யோத கால்வாயை அமைத்தல் B பர்மா மீது படையெடுத்தல்
C சோழர் ஆட்சியிலிருந்து நாட்டை விடுவித்தல்

(ஆ) பின்வரும் மன்னர் காலத்தில் இடம் பெற்ற அந்நிய ஆக்கிரமிப்புக்களை A, B, C, D ஒழுங்கில் தருக.

A வலகம்பா B மித்தசேனன் C 1ம் சேனன்
D வங்கநாசிக திஸ்ஸ

(இ) நீர்வளநாகரிக காலத்தில் மேற்பட்ட வெளிநாட்டு வர்த்தமாக இருந்துள்ளது என்பதற்கான ஆதாரங்களை சுருக்கமாக தருக?

(ஈ) நீர்வளநாகரிகம் வீழ்ச்சி அடைவதில் கலிங்க மாகனின் படையெடுப்பு பங்களித்த விதத்தை சுருக்கமாக விவரிக்குக.

(04) கலிங்க மாகனின் படையெடுப்பின் பின் இராசதனி தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்ததுடன் மக்களின் பொருளாதார,சமூக நடவடிக்கையும் மாற்றம் அடைந்தன

(அ) 1. இந்தியாவின் அதிவீர ராம பட்டினத்தை ஆக்கிரமித்தல்
2. பாண்டி மன்னனுடன் நட்புக் கொண்டு தந்த தாதுவை மீட்டு வந்த மன்னன்
3. குருணாகலில் அந்துக்கல்புரவை தலை நகராக்குதல் மேற்படி நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களைத் தருக.

(ஆ) கம்பளை இராசதானியாக தெரிவு செய்யப்பட்டமையில் பங்களித்த காரணிகள் இரண்டைத் தருக?

(இ) 2ம் பராக்கிரம பாகுவின் சமய,அரசியல் பணிகளை சுருக்கமாக விளக்குக.

(ஈ) தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்த காலத்தில் இடம் பெற்ற பொருளாதார மாற்றங்களை விவரிக்குக.

(05) இலங்கையின் வரலாற்றில் கண்டி இராசதானி அநுராதபுர இராசதானிக்கு அடுத்ததாக நீண்ட காலம் நிலைந்திருந்தது.

(அ) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது இலங்கையில் இருந்த இராசதானிகளை அதன் மன்னர்களையும் A, B, C, ஒழுங்கில் தருக?

(ஆ) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களை A, B, C, D ஒழுங்கில் எழுதுக

A கண்ணொறுவ போரை வழிநடத்தி வெற்றி பெறல்
B 1782 ஆம் ஹியு பொயிட் என்ற ஆங்கிலேயரைச் சந்தித்தல்
C கள்ளிக்கோட்டை சமோரின் உதவியுடன் போர்த்துக்கேயரை விரட்ட நடவடிக்கை எடுத்தல்
D வீரசுந்தர பண்டாரவை கொன்று நிக்கம்பிட்டிய பண்டாரவை கண்டி பிரதிநிதியாக நியமித்தல்

(இ) 1ம் விமல தர்மசூரியரின் அரசியல் சமயப் பணிகளை சுருக்கமாக விவரிக்குக.

(ஈ) கண்டி இராசதானியை போர்த்துக்கேயர் ஒல்லாந்தரால் கைப்பற்றி கொள்ள எடுத்த முயற்சிகளை முறியடித்து தனது சுகந்திரத்தை பாதுகாத்துக் கொள்ள பங்களித்த காரணிகள் இரண்டை விளக்குக?

*ஆசிரியர் :*
**த. அகிலன்,** Dip. in Tech (Merit)
*புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை*
*வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்*

# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள்

## பயிற்சிகள் 14 இல் வெற்றி பெற்ற வெற்றியாளர்

சி.மிர்ஷாலினி
140 வைத்திய சாலை வீதி
திருகோணமலை
தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி.

## பயிற்சிகள் 18 இல் வெற்றி பெற்ற வெற்றியாளர்

A.T. மதுரகன்
284 பிரதான வீதி
திருகோணமலை
தி/ புனித சூசையப்பர் கல்லூரி.

## பயிற்சிகள் 21 இல் வெற்றி பெற்ற வெற்றியாளர்

சி.தண்ணியா
17/25 பாரதி வீதி
திருகோணமலை
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் கல்லூரி

## பயிற்சிகள் 22 இல் வெற்றி பெற்ற வெற்றியாளர்

முகம்மது பைசல் - இஹ்சான் அகமட்
குறிஞ்சாக்கேணி -02
கிண்ணியா
தி/கிண்ணியா மத்திய கல்லூரி

## பயிற்சிகள் 24 இல் வெற்றி பெற்ற வெற்றியாளர்

போ. டினிசியா பிரவீனா
24/5K, கோணேசபுரம்
உவர்மலை
தி/ உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி.

## பயிற்சிகள் 25 இல் வெற்றி பெற்ற வெற்றியாளர்

ச.மு.ச.சஹ்ரான்
அக்கரைச்சேனை
மூதூர் - 01
தி/அல்ஹிலால் மத்திய கல்லூரி

## பயிற்சிகள் 28 இல் வெற்றி பெற்ற வெற்றியாளர்

வி.லாவணியா
90/6னு உட்துறைமுக வீதி
திருகோணமலை
தி/சென்மேரிஸ் கல்லூரி

**வெற்றி பெற்ற அனைத்து வெற்றியாளர் களுக்கும் மலைமுரசு சார்பில் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். இவர்களுக்கான பரிசில்கள் நடைபெறவுள்ள மலைமுரசின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படும்.**

**பரிசில்களை நியூ ரிங்கோ ஸ்டேசனர்ஸ் வழங்கி கௌரவிப்பார்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெண்களைப் பற்றி குர்ஆனில் கூறப்பட்டவை

கபடமற்ற இறைநம்பிக்கையுள்ள கற்புடைய பெண்களை அவதூறு கூறுவோர் இவ்வுலகிலும் மறு உலகிலும் சபிக்கப்படுவார்கள் மேலும் அவர்களுக்கு கொடிய வேதனையும் உண்டு. (அல்குர்ஆன் 24: 23)

உங்களிடையே (பெண்களிலும் ஆண்களிலும் மணமாகாது ) தனித்தவர்களாய் இருப்பவர்களுக்கு மணம் முடித்து வையுங்கள். (அல்குர்ஆன் 24: 32)

நீங்கள் அமைதி அடைவதற்காக உங்களில் அருந்தே உங்கள் துணைவியர்களை அவன் (அல்லாஹ்) சிருஸ்டித்து உங்களிடையே பரஸ்பர அன்பையும் இரக்கத்தையும் உண்டாக்கியது அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும். (அல்குர்ஆன்)

மனிதர்களே! உங்களை ஒரு தனி மனிதரிலிருந்து உண்டாக்கி உங்கள் இறைவனிடம் அந்தத் தனி மனிதரிலிருந்து அவருடைய வாழ்க்கைத் துணைவியை உண்டாக்கி எண்ணற்ற ஆண் பெண்களை நெடுகிலும் பரவச்செய்த இறைவனிடம் பயபக்தி உடைவர்களாக இருந்து வாருங்கள். (அல்குர்ஆன் 4: 1)

உங்கள இனத்தவரிலிருந்தே அல்லாஹ் துணைவியர்களை உண்டாக்கித் தந்துள்ளான். அவர்கள் மூலம் உங்களுக்குப் புத்திரர்களையும் புத்திரிகளையும் பேரக்குழந்தைகளையும் அருளியுள்ளான். (அல்குர்ஆன் 16: 72)

உங்கள் மனைவியர் உங்களுக்கு உடையைப் போன்றவர்கள். நீங்கள் அவர்களுக்கு உடையைப் போன்றவர்கள். (குர்ஆன்)

உங்கள் மனைவியர் உங்களுக்கு (பயிரிடும்) பண்ணையைப் போல் உங்கள் பண்ணையை நீங்கள் விரும்பிய முறையில் அணுகலாம் ஆனால் அவர்களை நெருங்க முன் அவர்களுக்கு ஏதேனும் நலமானதைச் செய்யுங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (அல்-குர்ஆன்)

பெண்ணை விட ஆண் அதிகம் பலமுடையவன் அவன் அவளை தன் உழைப்பாலும் சொத்தாலும் காப்பாற்றி நிர்வாகம் செலுத்துவதால் அல்லாஹ் அவனுக்கு பெண் மீது ஆதிக்கம் அளித்துள்ளான்.(அல் - குர்ஆன் )

எனவே நல்லொழுக்கமுள்ள பெண்கள் (அல்லாஹ்வுக்கும் தம் கணவருக்கும்) பணிந்து கீழ்படிந்துள்ளவர்களாகவே நடப்பார்கள் (கணவர்கள் இல்லாத சமயத்தில் தங்களைக் கண்காணிக்கும் படி அல்லாஹ் உத்தரவிட்டுள்ளவற்றை (கணவரின் உடமைகளை) பேணிபாது காப்பார்கள். (அல்குர்ஆன் 4: 34)


மேலும் கர்ப்பப்பைக்கு (அதாவது தாய்மைக்கு ) மரியாதை காட்டுவார்கள்.

(மாதவிடாய் காலங்களில்) நீங்கள் உங்கள் மனைவியரோடு சம்போகம் (மட்டும்) நீங்கலாக சகலமும் பெறுங்கள். (குர்ஆன்)

தன் கணவன் தன்னைக் கொடுமைப்படுத்துவான் அல்லது ஒதுங்கி விடுவான் என்று பயப்படும் மனைவி தன் கணவனோடு ஒரு சுமூகமான முடிவுக்கு வர முடியும் அதில் தவறேதுமில்லை இத்தகைய வழிமுறை சிறந்ததாகும். (அல்குர்ஆன் 4: 128).

ப.இனோஜா பர்வீன்
ஆனைச் சேனை

## முழு உலகமும் வட்டியில் மூழ்கிக்கிடக்கின்றது



உலகப் பொருளாதாரத்தை நிர்ணயிக்கின்ற சக்தி வட்டிக்கே உண்டென ஏகாதிபத்திய நாடுகள் கருதுகின்றன. விவசாயத்துறையும் இயக்கப்பட வேண்டும் என்று மேற்குலகு கருதுகின்றது. ஆனால் இதன் விளைவுகளை ஆழமாக நோக்கி பார்க்கும் ஒருவர் உலகப்பொருளாதார அமைப்பில் தோன்றி உள்ள சகல பின்னடைவுகளுக்கும் இதுவே காரணம் என்பதை புரிந்து கொள்வர். பணத்தை தெய்வமாக மதிப்போருக்கு இலாபத்துறையில் மட்டும் கூடுதலான பற்று தோன்ற முடியும் **இடிப்புகளை** பொறுத்த வரையில் வட்டியே ஒரு மேலான வியாபார முயற்ச்சியாக அமைகின்றன. ஆனால் மனித நலன்கள் இதில் மிகப்பெரிய அளவில் புறக்கணிக்கப்படுவதால் இம்மையில் நிம்மதியற்ற நிலையையும் மறுமையில் துன்பங்களுக்கும் வேதனைகளுக்கும் உட்படக்கூடிய நிலையையும் அது ஏற்படுத்தி விடலாம்.

அல்லாஹ்வுக்குப் பயந்து இதுவரை வாங்கியது போக மீதியிருப்பதை விட்டுவிடுங்கள் இவ்வாறு நீங்கள் நடந்து கொள்ளாவிட்டால் அல்லாஹ்வுடனும் அவனுடைய தூதருடனும் யுத்தம் செய்ய சித்தமாகிவிடுங்கள். ஆயினும் நீங்கள் வட்டி வாங்கியது பற்றி வருந்தி மீண்டுவிட்டால் உங்கள் பொருளின் அசல் தொகை உங்களுக்குண்டு. நீங்கள் அநியாயம் செய்யமாட்டீர்கள். இவ்வாறு அல்குர்ஆன் ஓர் அருவருக்கத்தக்க செயலாக வட்டியை காண்கின்றது. இஸ்லாமிய பொருளாதாரம் ஒழுக்கவியலின் அடிப்படையில் கட்டியெழுப்பப் பட்டிருப்பதனால் வட்டியை அது வேரோடு களைதெரிகின்றது. பொது மக்களின் இரத்தத்தைக் குடிக்கும் ஒரு செயலாக இது அமைவதனால் தான் அல்லாஹ்வுடனும் போர் செய்ய சித்தமாகிவிடும்படி வட்டி தொழிலில் ஈடுபடுவோர் கேட்கப்பட்டிருக்கின்றனர். வட்டி வாங்குபவர்கள் மீதும் வட்டி கொடுப்பவர்கள் மீதும் அவ்விருவருக்கும் சாட்சியாக இருப்பவர்கள், வட்டிக்கணக்கு எழுதுபவர்கள் மீதும் நபியவர்கள் சாபமிட்டார்கள் (முஹாரி : முஸ்லிம்)

வட்டித் தொழில் சமுக ஆத்மீக ரீதியான பாதிப்புக்களையும் ஏற்படுத்திச் செல்கின்றது. சமூகத்தில் வாழும் செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே அன்பு ரீதியிலானதொரு உறவு தொடர்ந்திருக்க வேண்டும்மென்றே இஸ்லாம் விரும்புகின்றது.

எல்லா விதமான கோணங்களிலும் வட்டி வந்து விட்டது. அரபு எழுத்துக்களின் மூலம் வங்கிகள் கடன் என்ற பேரில் வட்டி. இதில் இருந்து சமூகத்தை பாதுகாக்க வேண்டும். சந்ததி சந்ததியாக பாதிப்படையும். இப்போது உள்ள சூழ்நிலையில் வட்டி வீடு தேடி வருகிறது. வீட்டிற்கு தேவையான தளபாடங்கள், பொருட்கள், வாகனங்கள் மூலம் வட்டி இதிலிருந்து நாம் விடுபட வேண்டும். நாளை மறுமையில் கைசேதப்படுவோம். மிக கடுமையான தண்டனைக் குரியவர்களாக ஆகிவிடுவோம் என்பதை நினைவில் கொண்டு இந்த பாவமான செயலில் விடுபட வேண்டும் எங்கள் சமூகத்தையும் பாதுகாக்க வேண்டுமென்று இறைவனை பிராத்திப்போம்.

ஜாபிர் முஹமட் றாபி,
ஆனைச்சேனை,
மூதூர் - 02.

## தகுதியானவர்களை ஓரங்கட்டுகின்றதா மு.காவின் தலைமை?

(சென்ற வாரத் தெடர்ச்சி)

மறைந்த தலைவர் மரணிக்கும் முன் ஒரு நூலினை வெளியிட்டார் அந்த நூலின் பெயர் "அஷ்ரபும், நானும்" என்ற நூலாகும். இந்த நூலின் பெயரினை சற்று பிரித்து நோக்குவோமாயின் "அஷ்ரபும்"என்றால் கட்சியின் முதலாவது நபர் மறைந்த ஸ்தாபக தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபைக் குறிக்கும். "நானும்" என்றால் கட்சியின் இரண்டாவது நபர் சிரேஷ்ட சட்டத்தரணியும் ஸ்தாபக செயலாளர் எஸ்.எம்.ஏ.கபூரைக் குறிக்கும். இதனை சுட்டிக் காட்டும் நோக்குலேயே மறைந்த தலைவர் தனது மரனத்துக்கு முன் இந்த நூலினை வெளியிட்டார்.

ஏனெனில் தான் மரனித்தாலும் மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் கட்சியின் ஆரம்ப போராளிகளில் இரண்டாவது அங்கத்துவத்தைப் பெற்றவர் எஸ்.எம்.ஏ.கபூர் என்ற தெளிவு ஏனையோர்களுக்கு விளங்க வேண்டும் என்ற ஒரு சிந்தனையுடன் எழுதியுள்ளார். தலைவரின் மரனத்தின் பின்னர் கட்சியின் அடுத்த தலைவர் யரர் என்ற கேள்விக்கு ஒரு பதிலைக் கொடுத்தவரும் இந்த கபூராவார். அதுமட்டுமன்றி தற்போது தலைமை பதவியில் இருக்கும் ஹக்கீமை தலைவராக்க முன் நின்றவரும் இந்த கபூரேயாவார். இவரைக்கூட இந்த ஹக்கீம் மறந்து ஓரம் கட்ட முனைவது எந்த விதத்தில் நியாயம்? என்ற கேள்வியை மக்கள் மத்தியில் முன்வைக்க முனைகின்றேன்.

அதற்கு அடுத்ததாக கல்முனையைச் சேர்ந்த நிசாம் காரியப்பராகும். அவர் மக்கள் மத்தியில் பெரும் நன்மதிப்பையும், வாக்குப் பலத்தினையும் சம்பாதித்துவரும் நிலைமையை அவதானித்த றஊப் ஹக்கீமின் பிரதிநிதிகள் தங்களின் தலைமை பதவிக்கு ஆப்பு வந்து விடப்போகின்றது என்ற கருத்தினை முன்வைக்க அதற்கெதிராக செயற்படத் தொடங்கிய ஹக்கீம், நிஸாம் காரியப்பரை வீழ்த்தும் நோக்குடன் சாய்ந்தமருதைச் சேர்ந்த சிறாஸ் மீராசாகிபை களம் இறக்கி அதில் வெற்றியும் கண்டார்.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை அறிவாற்றல் உள்ள மிகப் பெரும் தலைவர்கள் இருந்து செயற்பட்டு மரனித்துச் சென்ற இடமாகும். அதற்கு அடுத்ததாக பஷீரின் பிரச்சினை ஹக்கீமுக்கு ஒரு தலையிடியை கொடுத்து வருகின்றது.

ஹக்கீம் பஷீருக்கு ஏதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முனையமாட்டார் மாறாக பஷீரை தானாகவே கட்சியில் இருந்து ஓரம் கட்டும் முயட்சியினையே தற்போது செய்கிறார். அவரது முழு நோக்கமும் கிழக்கில் தலைமைகளை அழித்து தனக்கு வாசியானவர்களை கட்சியில் வைத்து கிழக்கையும் முழு இலங்கை முஸ்லிம்களையும் ஏமாற்றும் பெரும் பணியினையே இவர் செய்ய கடும் பிரத்தனம் எடுக்கிறார்.

பஷீர் இதில் தெளிவாக இருக்க வேண்டும் கிழக்கில் தற்போது இருக்கிற உயர்ந்த பட்சம் தலைமையை கேள்வி கேட்க திராணி உள்ள ஒருவர் பஷீர் என்று தான் குறிப்பிடலாம். முழு முஸ்லிம் சமூகத்தையும் குழி தோண்டி புதைக்கும் ஹக்கீமின் முயற்சி குறித்து கேள்வி கேட்க பஷீரை தவிர கிழக்கில் எவராவது அக் கட்சிக்குள் இருக்கிறார்களா? என்ற ஒரு கேள்வியை எழுப்பினால் 'அதற்கான பதில் இல்லை என்ற பதிலே வரும். மிகப் பெரும் சக்தி வாய்ந்தவர்கள் கிழங்கில் மு.காவுடன் இருந்தார்கள் அவற்றை எல்லாமே மக்களை தூண்டி விட்டு பிழையான வளி நடாத்தலுடன் ஓரம் கட்டினார். அந்த வரிசையிலேயே அதவுல்லா ஹிஸ்புல்ல போன்றவர்களை நாம் நோக்கலாம்.

ஹக்கீமின் ஒவ்வொரு வார்த்தைக்கும் அடிமை பட்டவர்களாக கிழக்கின் மக்கள் இருப்பதே அவரின் மூலதனமகும். இதனை சரியாகவும் சாதுாரியமாகவும் ஹகீம் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்.

இப்போது ஹக்கீமுக்கு இருக்கும் ஒரு தலையிடி தான் பஷீர் இவரை களட்டி விட்டால் தனிக்காட்டு ராஜாவாக இருந்து காலத்தை ஓட்டலாம் என்று நினைக்கிறார். அதன் முனைப்பாகவே ஹக்கீம் பஷீரை சீண்டி பார்கிறார்.

பஷீர் அமைச்சு பதவி வகிப்பதால் ஹக்கீமுக்கு ஏற்பட்ட குறை என்ன என்பதை இந்த சமூகம் சிந்திக்குமானால் சரியான பதிலை இந்த சமூகம் கண்டு கொள்ளும்.

ஹக்கீமுக்கு சமாந்தரமாக யாரும் வந்து விடக்கூடாது என்பதுவே அவரின் ஒரே ஒரு குறிக்கோளாகும். இதனை கச்சிதமாக கையாண்டு வருகிறார் ஹக்கீம். திரை மறைவில் செய்கின்ற வற்றினை பஷீர் வெளிப்படையாக செய்வோம் என கட்சியையும் தலைமையையும் அழைக்கிறார். இந்த அழைப்பில் ஹக்கீமுக்கு ஏன் நியாம் காண முடியாது. ஏன் அரசுக்கு நல்ல பிள்ளையாய் நடிக்க வேண்டும், அல்லது அரசை விமர்சிக்க வேண்டும். இந்த நடிப்பு எத்தனை காலத்துக்கு நீடிக்கும் மக்கள் மட்டுமே இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

பஷீரை கட்சியில் இருந்து ஓரம் கட்ட நினைப்பது கிழக்கில் உள்ள கட்சி முக்கியஸ்தர்கள் தங்களுக்குள் சுருக்கு போட்டு தற்கொலை செய்வதற்கு சமம் என்றுதான் சொல்லலாம்.

பைறுஸி ஜுஹஸிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமைச்...

அருட்தந்தை யோகேஸ்வரன் அவர்கள் கடத்தல் மற்றும் காணாமற் போதலுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் மனித உரிமைச் செயற்பாட்டாளராகும்.

மூவினத்திற்குமான இவருடைய செயற்பாடுகள் உதவிகளாகவே மக்களைச் சென்றடைவது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையர் இலங்கைக்கு பயணித்திருந்தபோது கிழக்கிற்கு வருகை தந்த வேளையில் வணக்கத்துக்குரிய அடிகளாரைத் திருகோணமலையில் தனிமையாகச் சந்தித்து உரையாடியிருந்தார்.

அதைத் தொடர்ந்து அடிகளுக்கு எதிராகக் கடுமையான வதந்திகள் பரப்பப்பட்டிருந்த நிலையிலேயே இவ்வாறான சுவரொட்டிகள் நகரத்தின் முக்கிய பகுதிகளில் ஒட்டப் பட்டிருந்தமையைக் காண முடிந்துள்ளது.

நவநீதம்பிள்ளை அவர்கள் தனது பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய போது தம்மைச் சந்தித்த, தமக்குத் தகவல்களை வழங்கிய அனைவருக்கும் தகுந்த பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளிற் பல மறுநாள் அதிகாலை யாராலோ கிழித்தகற்றப் பட்டிருந்தன.

## பதுமன்...

பல குறைகள் இருப்பதாகக் கருதிய மேல் நீதிமன்ற நீதிபதியால் இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2009ம் ஆண்டு மே மாதத்தின் இறுதி யுத்த நாட்களில் படையினரிடம் சரணடைந்த இவரைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவு கையேற்று விசாரணைகளை நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மகாணத்தில் புலிகள் பலம் பெற்று விளங்கிய காலப்பகுதியில் மட்டக்களப்பு அம்பாறை மாவட் டங்களிற்குத் தளபதியாக கருணாவும், திருகோணமலை மாவட்டத் தளபதியாகப் பதுமனும் செயற் பட்டிருந்தனர்.

2004ம் ஆண்டின் மார்ச் மாதத்தில் கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறிய போது அதற்கு உதவியதாக சந்தேகங் கொண்ட விடுதலைப் புலிகளின் தலைமையால் பதுமன் வன்னிக்கு அழைக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர் இறுதிப் போர் முடிவு வரை அவர் வன்னியிலேயே நிலை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் தேவை...

குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ள மக்கள் தற்போது ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய ஆசிரியர்கள் எவரும் இல்லை என்றும் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அதிபருடன் கலந்தாலோசித்த போது அவரும் அதனை உறுதி செய்திருந்ததுடன் இவ்விடயத்தைப் பல தடவைகள் வலயக் கல்வித் திணைக்களத்திற்கும், மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கும் கடிதம் மூலம் அறியத் தந்திருந்தாகவும் தெரிவித்தார். கடந்த ஜனவரி மாதம் முதல் மூன்று ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் இப்பாடசாலையை விட்டு நீங்கியிருப்பதாகவும் அதற்க மாற்றீடாக எவரையும் தற்போது வரை நியமிக்கவில்லை என்றும் அதிபர் தெரிவித்தார். அதனால் முதலாம் தரம், நாலாம் தரம் மற்றும் ஐந்தாம் தரம் ஆகிய வகுப்புக்களுக்கு ஆசிரியர்கள் இல்லை என்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

மேல்நிலைக் கல்விப் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட ஆளணியை விட மேலதிகமாக ஒருவர் அப் பாடசாலையில் இருப்பதாக அதிபர் மலைமுரசிற்குத் தெரிவித்த போது குறுக்கிட்ட மக்கள் அவ்வாறான ஆசிரியர் ஒருவர் நாளாந்தம் பாடசாலைக்கு வருவதாகவும் அவர்



கற்பிக்காமல் தனியான வகுப்பறைகளில்தூங்கி விடுவதாகவும் தெரிவித்தனர். சிற்றுண்டிச் சாலையிலேயே பெருமளவு நேரத்தை அவ் வயதான ஆசிரியர் கழிப்பதாகவும் தெரிவித்தனர்

இக் குற்றச்சாட்டுத் தொடர்பாக பாடசாலை அதிபரிடம் வினவிய போது அவர் அம் மக்கள் முன்னே வாய்மூடி மௌனியாக இருந்தமையால் அக் குற்றச்சாட்டு உண்மையானது போலவே உள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் பல தடவைகள் ஆசிரியர்களை நியமிப்பதாக உறுதி கூறிய போதும் அவ்வாறு ஆசிரியர்களைத் தற்போது வரை நியமிக்கவில்லை எனக் கூறிய கிரா அபிவிருத்திச் சபைத் தலைவர் அவர்கள் திடுக்கிடும் விடயம் ஒன்றையும் அங்க தெரிவித்தார். பெரியகுளத்திற்கு நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் எவரும் அங்கு வந்து தொழிலாற்ற விரும்பவில்லை என வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார் என்பதே அத்தகவலாக இருந்தது.

இக் களோபரத்தைத் தொடர்ந்து கோட்டக் கல்வி அதிகாரியான திரு.செல்வநாயகம் அவ்விடத்திறகு வருகை தந்து தான் நியமனமாகி இரு நாட்களே ஆகியிருப்பதால் தனக்குச் சிறிது கால அவகாசம் தருமாறு வேண்டிக் கொண்டார். அவரைத் தொடர்ந்து பிரதி வலயக் கல்வி அதிகாரி திரு. அரியநாயகம் அவ்விடத்திற்கு வருகை தந்து பொது மக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அதன் போது குறித்த வயதான ஆசிரியர் தொடர்பாகத் தானும் அறிந் துள்ளதாகவும் அதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். சுமுகமான தீர்வொன்று தொடர்பாக பாடசாலைக்குள்ளே சென்று கதைக்கலாம் என அவர் விடுத்த வேண்டுகோளை ஏற்ற மக்கள் பாடசாலையைத் திறக்க அனுமதித்தனர்.

## நாட்டை விட்டு...

அனுப்பியுள்ளதாகவும் அச் சட்டவியலாளர் தெரிவீத்துள்ளார். அக்கடிதத்தில் தனது வீட்டினுள் நுழைந்த ஆயுததாரிகளால் தனக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் தொடர்பாக நீதியும் நேர்மையுமான முறையில் விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் விடுத்திருந்தார். உண்மைகளையும், ஊழல்களையும் வெளிக்கொனரும் ஊடகவியல்ாளர்களின் உயிருக்கு ஆபத்திருப்பதாக அண்மையில் இணையத்தளமொன்றுக்கு மந்தனா செவ்வியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது பயணம் தொடர்பாக பி.பி.சி உலகச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் சில மாதங்களுக்கே தான் நாட்டை விட்டு வெளிச் செல்வதாகவும் மிக விரைவில் தான் நாட்டுக்குத் திரும்பவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னை பிரதம ஆசிரியர் பிரெட்ரிக்கா ஜேன்ஸ் சர்ச்சைக்குரிய வெள்ளைக் கொடி வழக்கு, மற்றும் பாதுகாப்புச் செயலாளருடனான செவ்வியொன்றை வெளியிட்டமை தொடர்பான சர்ச்சைகளில் சிக்கியிருந்த போது அப்பதவியிலிருந்து நுட்பமான முறையில் நீக்கப்பட்ட பின்னர் நாட்டை விடடுத் தப்பியோடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் சண்டே லீடர் பத்திரிகையின் பத்தியெழுத்தாளர் சவுகத் அலி மீது துப்பாக்கிச்சூடு நிகழ்த்தப்பட்டதாயினும் அவர் காயங்களுடன் உயிர் தப்பியிருந்தார்.

### சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு கடும் கண்டனம்

இவ்வாறு மந்தனா நாட்டை விட்டு வெளியேறியுள்ளமையானது ஊடகவியலாளர்கள் மீது தொடராக மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்களின் விளைவு என சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு தனது அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

## மாகாண அமைச்சரின்..

அவ்வாகனத்திலிருந்த மற்றையவரும் கைதாகியுள்ளார்.

வாகனத்துடன் கைதாகியவர்கள் சம்மாந்துறையைச் சேர்ந்த சின்னமுகமட் ரஷீன் மற்றும் மௌலானா தம்பி அலியார் எனத் தெரியவருகின்றது.

களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றில் முன்நிலைப் படுத்தப்பட்ட இவ்விருவரையும் எதிர்வரும் 24ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் அத்தினத்தில் அடையாள அணி வகுப்பைச் செய்து ஓட்டியவரைக் கண்டு பிடிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

## புல்மோட்டைக் காணி...

மேலும் அன்வர் கருத்துத் தெரிவிக்கையில், காணி அளவை நடவடிக்கை கடந்த 9ம் திகதி நடைபெறவிருந்த போது ஏற்பட்ட மக்கள் எதிர்ப்பின் காரணமாக அவ்வளவை நடவடிக்கை தற்காலிகமாகக் கைவிடப்பட்ட நிலையில், அரச நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 10.09.2013ல் திருகோணமலை நீதவான் நீதிமன்றில் 10,000 ரூபாச் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்ட அனைவரும் 18.09.2013 அன்று குச்சவெளி நீதிமன்றத்தில் முன்நிலைப் படுத்தப்பட்டனர்.

அதன்போது குச்சவெளி நீதிமன்றில் இருந்த அனைத்து சட்டத்தரணிகளும் இவ்விடயத்தில் தமது வாதங்களை முன்வைத்தனர். அவ் வேளையிலும் பூஜா பூமி மற்றும் தொல்பொருள் காரணங்களுக்காக காணி அளவையை மேற்கொள்ள அனுமதிக்குமாறு நீதிபதியிடம் காவல் துறையினர் வேண்டுகோள் விடுத்த போதும் அதனை நீதிபதி நிராகரித் திருந்தார். நில அளவைக்கான போதி ஆதாரங்களை சமர்ப்பிக்காத காரணத்தால் குச்சவெளி பிரதேசச் செயலாளர் மற்றும் திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரை 02.10.2013 அன்று முன்னிலைப் படுமாறும் கட்டளையிட்டுள்ளார் எனத் தெரிவித்தார்.

## தனிநாயகம் அடிகளாரின்...

தொனிப்பொருளில் சிரேட்ட விரிவரையாளர் திரு சந்திரசேகரமும், "ஈழத்துத் தமிழ் எழுத்திலக்கியத்தில் மொழி ஆளுகை'' பற்றி 'மாயன்' இரா.ஸ்ரீஞானேஸ்வரனும் (தலைவர், கலை கலாசார அபிவிருத்தி அமையம், பிரதம ஆசிரியர் - மலைமுரசு) கருத்துரைகளை வழங்கவுள்ளனர். இக் கருத்துரைகளுக்கு இடையே குழல் இசையினை ஆசிரியர் திருமாறன் அவர்களின் மாணவன் வழங்க, 'ஸ்வரலயா'வாத்திய இசையினைச் சின்ன வள்ளி மிருதங்கக் கலாமன்ற மாணவர்கள் நிகழ்த்தவுள்ளனர்.

மாலைக் கலை நிகழ்வுகளில் ''இனி விதி செய்வோம்'' என்ற தலைப்பில் நாட்டிய நாடகத்தினை செல்வ இசை நடன சபா மாணவிகள் வழங்கவுள்ளனர். 'நன்றாய் தமிழ் செய்வோம்' எனும் தலைப்பில் வாத்திய இசைக் கச்சேரியை தவத்திரு. குரூஸ் மதுராந்தகன் அடிகளாரின் இசைக் குழுவினர் வழங்க, பன்னிய இசையினை முத்துக்குமாரசாமி இசை நடன மன்ற மாணவிகள் வழங்க வுள்ளனர். "அடிகளாரின் தமிழும், வாழ்வும்" என்ற தலைப்பில் புலவர் அரியநாயகம் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். "செந்தமிழின் பெருமை சொல்வோம்'' என்ற தலைப்பில் கவியரங்கினை தவத்திரு அருள்வரதன் அடிகளாரின் தலைமையில் பத்மபிரசன் உட்பட புனித மரியாள் கல்லூரி மாணவிகளான பாத்திமா ரிஸ்மியா மற்றும் பிரசாந்தி ஸ்ரீதரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தமிழ் மணக்கும் இவ்விழாவிற்கு அனைத்து ஆர்வலர்களையும் திரண்டு வருமாறு விழாக்குழுவினர் அன்புடன் அழைப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

செல்வ இசை நடன சபா மாணவிகள் பயிற்சியில்...



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மக்கள் தமிழ்த் தேசியத்தை என்றும் காட்டிக் கொடுத்ததில்லை



தமிழ்த் தேசியத்தை எப்போதுமே மட்டக்களப்பு மக்கள் காட்டிக் கொடுத்ததில்லை. அவர்கள் என்றுமே தமிழ்த் தேசிய உணர்வுடனேயே செயற்படுகின்றார்கள் என்று மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியத்தைக் காட்டிக் கொடுத்தது மட்டக்களப்பு மக்கள் தான் என வடக்கின் மக்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம். அது தவறு என்பதை மட்டக்களப்பு மக்கள் கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் நிரூபித்துள்ளார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் 11 ஆசனங்களை கிழக்கு மக்கள் எடுத்துக் கொடுத்ததிலிருந்து மட்டக்களப்பு மக்கள் இதனை நிரூபித்துள்ளனர் என்பதனை வடக்கு மக்கள் நினைவிற் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர் கருத்தரங்கு



மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தியில் ஊடகவியலாளரின் பங்கு என்னும் தொனிப்பொருளில் அம் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு ஒன்று இடம் பெற்றுள்ளது.

மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் மீள் குடியேற்றப் பிரதி அமைச்சர் முரளீதரன், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. பி.எஸ்.எம். சாள்ஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அரச அதிபர் மாவட்டத்தில் நடைபெற்றுவரும் அபிவிருத்தித் திட்டங்களை விளக்கியிருந்தார்.

சிரேட்ட ஊடகவியலாளர் எம். நிலாம் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது. ஊடகச் சட்டம், அபிவிருத்தியில் ஊடகவியலாளரின் பங்கு போன்ற தலைப்புக்களில் வளவாளர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

## மாகாண அமைச்சரின் வாகனத்தை ஓட்டியது யார்?

களுவாஞ்சிக்குடி, தேற்றாத்தீவு காவல்துறைப் பிரிவில் நிகழ்ந்த வீதி விபத்தில் கிழக்கு மாகாணச் சுகாதார சேவைகள் அமைச்சரின் வாகனம் மோதியதால் துவிச்சக்கர வண்டி ஓட்டுனரான முதியவர் ஒருவர் பலியாகியுள்ளார். அதனைத் தொடர்ந்து வாகனச் சாரதியைக் கைது செய்ய முற்பட்ட போது சாரதி எனத் தன்னை அடையாளம் காட்டிக் கொண்ட நபர் விபத்து நடந்த போது அவ் வாகனத்தை, ஓட்டிக்கொண்டிருக்கவில்லை என அங்கிருந்த மக்கள் தெரிவித்ததை அடுத்து 15

(மட்டுநியூஸ்-கிருஸ்ணா)

## புல்மோட்டைக் காணி அளவைகள் 02/10 வரை பின்போடப்பட்டுள்ளது

புல்மோட்டையில் சுமார் 2,500 ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படவிருந்த அளவைகளை ஒக்டோபர் 02 வரை ஒத்தி வைக்குமாறு நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபை உறுப்பினர் அன்வர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

## தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா – திருகோணமலையில் 28ம் திகதி




திருகோணமலை மாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் தலைமையில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா எதிர்வரும் 28ம் திகதி திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

காலை மற்றும் மாலை அமர்வுகளாக நடைபெறவுள்ள இவ் விழாவில் காலை அமர்வுகளில் கருத்தரங்குகளும் மாலை அமர்வுகளில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

கருத்தரங்குகளில் "தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் பன்முகப்பார்வை" என்ற தலைப்பில் பேராசிரியர் விசாகரூபன் அவர்களும், "சங்க இலக்கியப் பாடல்களில் வர்க்க வெளிப்பாடு" பற்றிப் பேராசிரியை அம்மன்கிளி முருகதாஸ் அவர்களும், "தமிழ்மொழியைச் சர்வதேசமயப்படுத்திய தனிநாயகம் அடிகளாரின் தனித்துவமான பங்களிப்பு" பற்றித் தவத்திரு தமிழ்நேசன் அடிகளாரும் (தலைவர், தமிழ்ச்சங்கம், மன்னார்), தனிநாயகம் அடிகளார் பற்றிய பரந்துபட்ட பார்வையொன்றை கலாநிதி.சி.ஜெய்சங்கர் (தலைவர், நுண்கலைத்துறை, கிழக்கு பல்கலைக்கழகம்) அவர்களும், 15 மொழியும் அடிகளாரும் என்ற


15

## உலகின் அவலட்சணமான மிருகம் . 'ப்ளொப் (பீகூஷ்) மீன்'



உலகின் மிக அவலட்சணமான மிருகம் என உத்தியோகப் பற்றற்ற முறையில் அறிவிக்கப்பட்டுள்ள மீனினத்தையே படம் சுட்டி நிற்கின்றது.

நியூகாஸல் நகரத்தில் நடைபெற்ற பிரித்தானிய விஞ்ஞான விழாவொன்றில் அவலட்சணமான விலங்கினங்களைப் பாதுகாக்கும் உலக அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போட்டியில் இம் மீனினத்தை அவலட்சணமான மிருக இனமாக அக் கழகம் இம் மீனினத்தைத் தேர்வு செய்துள்ளது.

வாக்களிப்புக்கு விடப்பட்டிருந்த போட்டியில் இம் மீனினத்தையே அதிகமான மக்கள் அவலட்சணமான மிருக இனமாகத் தேர்வு செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

VEAL BUSINESS COLLEGE
English for
foreign visas/A\L Students
A1\ A2\ AB1 Level Certificates.
Full time classes.
Thursday
friday
Sunday
at 9 -10.30
aat :
aat SRI LANKA
Tamil medium.
Full time classes.
Part time classes.
Chartered Accountancy:
CA THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA
For A\L Students
English medium
Tamil medium
Institute Of Bankers of Srilanka
IBSL INSTITUTE OF BANKERS OF SRI LANKA
part time classes.
Tamil medium
English medium
159,seaview Road
Trincomalee.
T.P -0262227622

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org